*Sri Venkateswara University*
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்

# An Introduction to Tamil Poetry
# தமிழ்ச் செய்யுள் - ஓர் அறிமுகம்


By

**Dr. P. SOURIRAJAN**
Professor and Head of the Department of Tamil
Sri Venkateswara University
Tirupati - 517502



777
03
U.G
3777

*Sri Venkateswara University*
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்

# An Introduction to Tamil Poetry
# தமிழ்ச் செய்யுள் - ஓர் அறிமுகம்

By

**Dr. P. SOURIRAJAN**
Professor and Head of the Department of Tamil
Sri Venkateswara University
Tirupati - 517502

First Edition : March, 1982

Copyrights with
SRI VENKATESWARA UNIVERSITY

**An Introduction To Tamil Poetry**

by

**Dr. P. Sourirajan**
Professor and Head of the Department of Tamil

Copies : 1000

6-00
**Price : Rs. ~~4-00~~**

Printed at Maruthy Press, Madras - 600 014.

This book is published with the aid of the
U. G. C. Grant for Publication

# பொருளடக்கம்


முன்னுரை 1

I. பத்துப்பாட்டு

முல்லைப்பாட்டு ... 5

குறிஞ்சிப்பாட்டு ... 8

II. எட்டுத்தொகை

குறுந்தொகை ... 16

புறநானூறு ... 27

III. பதினெண் கீழ்க்கணக்கு

திருக்குறள் ... 42

IV. பண்டைக் காப்பியம்

சிலப்பதிகாரம் ... 52

V. பக்தி இலக்கியப் பாடல்கள்

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ... 60

VI. இடைக்காலக் காப்பியங்கள்

இராமாயணம் ... 66

பெரியபுராணம் ... 83

VII. தற்காலப் பாடல்கள்

பாரதியார் பாடல்கள்—கண்ணன் பாட்டு ... 107

# முன்னுரை

'என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளைப்' போலப் பழமையும் செழுமையும் தொண்டு திகழும் தமிழ்மொழியின்கண் விளங்குகின்ற இலக்கியச்செல்வம் அறிவால் எல்லையிடற்கு அரியது. முதன் முதல் கிடைத்துள்ள பண்டைத்தமிழ் இலக்கியங்கள் சங்கப் பாடல்கள் என வழங்கப்பெறுகின்றன. அவை, பல்லாயிரக்கணக்கில் இருந்திருத்தல் வேண்டும். கி. மு. 500 லிருந்து கி. பி. 200க்கு உட்பட்டனவாகக் கருதப்பெறும் ஆயிரக்கணக்கான அப் பாடல்களுள் பல, காற்றாலும் கதிராலும் கடலாலும் காப்பார் இன்மையாலும் கரையானாலும் அழிந்து மறைதலைக்கண்ட பண்டைச்சான்றோர் சிலர், மேலும் அவை அழிந்து ஒழிந்து சிதையாமலிருக்கத் தொகை நூல்களாக அவற்றைத் தொகுத்துக் காத்தனர். அவையே எட்டுத் தொகை என்றும் பத்துப்பாட்டு என்றும் வழங்கப்பெறுகின்றன.

எட்டுத்தொகை நூல்கள் இன்னின்ன எனப் பின்வரும் பழம் பாடல் மூலம் அறியலாம்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோ டகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை.

பத்துப்பாட்டு நூல்களை

முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை
பெருகு வள மதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

என்ற பழம்பாடல் தொகுத்துரைக்கிறது.

இந்த எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகியவற்றில் அடங்கியுள்ள பாடல்களின் பொருள் அகம் புறம் என இருவகைப்படும். காதல், கற்பு, மணவாழ்வு ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்ட பாடல்கள் அகத்திணைப் பாடல்கள் என்றும், போர் கொடை புகழ்பற்றிய பாடல்கள் புறத்திணைப் பாடல்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டன. இவற்றைச் சுருக்கமாக அகம் புறம் என்று வழங்குவர்.

பத்துப்பாட்டுள் முன்பு கண்ட பழம்பாடல் குறிப்பிடும் பத்துப் பாடல்கள் அடங்கியுள. அவற்றுள் ஆற்றுப்படை நூல்கள் ஐந்து. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பனவாகும். இவையெல்லாம் புறப்பொருள் பற்றியனவாகும். நெடுநல்வாடையையும் பண்டை இலக்கணநூலார் புறத்துள் அடக்குவர். ஆனால், இன்றைய ஆராய்ச்சியாளர் சிலர் அதனை அகத்துள் அடக்குவர். பத்துப்பாட்டுள் மிகநீண்டு 782 அடிகளில் விளங்கும் மதுரைக்காஞ்சியும் புறப்பாடலே ஆகும். இவ்வேழு பாடல்கள் நீங்க, மிகுந்துள்ள பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப் பாட்டு என்னும் மூன்றும் அகப்பொருள் பற்றியன ஆகும். இம்மூன்றனுள் பின்னிரண்டு பாட்டுகளும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகை, நற்றிணை, நெடுந் தொகை என்று குறிக்கப்பெறும் அகநானூறு, ஐங்குறுநூறு, கலித் தொகை ஆகிய ஐந்து தொகைநூல்களும் அகப்பொருள் பற்றியன. இவற்றுள் குறுந்தொகை, சில அடிகளில், அன்புகெழுமிய காதல் கற்பு வாழ்வின் திட்ப நுட்பங்களையெல்லாம் உவமை, உள்ளுறை, இறைச்சி முதலிய இலக்கிய நலம்பல செறிய எடுத்தியம்பும் பெற்றி பெற்றிருப்ப தால், இந்தத் தமிழ்ச்செய்யுள் அறிமுகத்தில், அந்தத் தொகையிலிருந்து சில பாடல்கள் இடம்பெறுகின்றன.

இந்த ஐந்து நூல்கள்போக மிஞ்சிய பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு ஆகிய மூன்றும் புறப்பொருள் பற்றி உரைப்பன. இவற்றுள் பாடுபொருளின் பல்வேறு பாங்கினை நினையும்போது புறநானூற்றுக்கு முதலிடம் உண்டு. எனவே, அந்தத் தொகை நூலிலிருந்தும் சில பாடல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

சங்ககாலத்தை ஒட்டி எழுந்த இலக்கியங்களில் இரண்டு சிறப்பு மிக்கன. அவை திருக்குறளும் சிலப்பதிகாரமும் ஆகும். தமிழர்கள் சங்ககாலத்தில் மேற்கொண்டு ஒழுகிய வாழ்க்கை நெறிகளுள் சீரியன வற்றையெல்லாம் தொகுத்தும் விளக்கியும் உரைப்பன இவ்விரு இலக் கியங்களாகும். பண்டைய வாழ்வில் கண்ட குறைகளுக்கு இடந்தராது தமிழர் நிறைமனிதராக நல்வாழ்வு வாழ இவ்விரு நூல்களும் அடிப் படை நூல்களாய் அமைந்துள்ளன.

இவ்விரு இலக்கியங்களை அடுத்து, தமிழிலக்கிய வரலாற்றில் பக்திப்பாடல்கள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. அவற்றுள் சைவச் சான்றோர் நால்வர் பாடல்களும், பன்னிரு ஆழ்வார் பாடல்களும் குறிப்பிடத்தக்கன. திருவேங்கடவன் திருவருள் நீழலில் இலங்குகின்ற இப் பல்கலைக்கழக வெளியீடாக வரும் இச் செய்யுள் திரட்டில்,

சிறப்பு நோக்கி, ஆழ்வார் அருளிச்செயலாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பதிகம் சில இடம் பெற்றுள்ளன.

இந் நாலாயிர திவ்வியப் பிரபந்தச் செல்வாக்கில், வான்மீகியினும் சிறந்து விளங்கும் இராம காதையாகிய கம்ப இராமாயணத்தி லிருந்து இரு படலங்கள் கம்பரின் கவித்திறத்தைப் புலப்படுத்தும் பாங்கில் அமைக்கப்பட்டுள்ளன.

இடைக்காலத் தமிழர்களின் தெய்வத்திருவாழ்வை, வரலாற்றை, பண்பாட்டை எடுத்தியம்பும் தனித்தமிழ்ப் புராணமாகிய பெரிய புராணத்திலிருந்து கண்ணப்ப நாயனார் புராணம் இங்கு எடுத்திணைக்கப் பெற்றுள்ளது. அன்புக்கு ஈடும் இணையும் இல்லாக் கண்ணப்பரது பெருவாழ்வு ஆந்திரமாநிலக் காளத்தியில் நிறைவுற்ற தால், அப்பகுதி இத்தொகுதியில் இடம்பெற்று இனிது விளங்குகிறது.

பண்டைத் தமிழ்ச்சீர்மையையும், தற்காலத்தில் அதன் நிலையையும், எதிர்காலத்தில் அது பெறப்போகும் ஏற்றத்தையும் எண்ணி, தற்காலத்துத் தமிழ்க் கவிஞர்களுள் முன்னோடியாகவும் முதன்மை பெற்றவராகவும் விளங்குகின்ற பாரதியார் பாடியருளிய கண்ணன் பாட்டில், இரு பாடல்களோடு இந்தத் தொகுதி நிறைவுறுகிறது.

தமிழிலக்கியக் கடலுள் அமைந்து விளங்குகின்ற மணிகளை யெல்லாம் அள்ளி எடுத்துத் தொகுத்தளிப்பதற்குப் போதிய அளவு வாய்ப்பின்மையால், இன்னும் எத்தனையோ சிறந்த பாடல் பகுதிகள் பல இதில் இடம் பெறவில்லை என்றாலும், பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழியை உணர்ந்த தமிழன்பர்கள், தமிழ்ச் செய்யுளை அறிமுகப்படுத்தும் இந்த நூலினை ஏற்றுப் போற்றுவர் என்று நம்புகிறேன்.

1-3-82 — பொன். சௌரிராசன்

## பத்துப்பாட்டு

'மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டு' என்ற பாராட்டுக்குரிய இப் பத்துப்பாடல்கள், நூறடிக்குக் குறையாது நீண்டுசெல்லும் நெடும்பாடல்கள். பத்தினைத் தன்னகத்தே கொண்டது. இவற்றுள் அகத்திணைத் தமிழின் அருஞ்சிறப்பை ஆரியஅரசன் பிரகத்தனுக்கு உணர்த்துவதற்காகக் 'குறிஞ்சி பாடிய கபிலன்' என்று சிறப்புப் பெயர் பெற்ற புலனழுக்கற்ற அந்தணாளனாகிய கபிலர் இயற்றிய குறிஞ்சிப் பாட்டும், முல்லைநில அகப்புறவாழ்வின் அன்பையும் ஆற்றலையும் எடுத்துணர்த்தும் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் இயற்றிய முல்லைப்பாட்டும், இப்பகுதியில் அமைந்துள.

பெருமுதுபெண்டிர் விரிச்சிகேட்டலும், தலைவன் விரைந்து வருவன் என்று தேற்றுதலும், பாடிவீட்டின் இயல்பும், யானைப் பாகரது செயல்களும், படைவீடுகளின் இயல்பும், மெய்காப்பாளர் காவலும், மன்னன் கண்படை பெறாது நெடிதுநினைந்து இருத்தலும், வெற்றி முழக்கமும், தலைவனது பிரிவுத்துயரும், முல்லைநில மாட்சியும், அரசனது வருகையும் இலக்கிய எழில் ததும்ப முல்லைப்பாட்டில், எடுத்தியம்பப் பெற்றுள்ளன.

ஆரிய எண்வகை மணங்களுள் ஒன்றாகிய யாழோர் (கந்தர்வம்) மணத்திலிருந்து தமிழர்தம் காதற்களவுநெறி மாறுபட்டு எவ்வாறு சிறந்துள்ளது என்பதனை, அறத்தொடு நிற்கும் துறையை விளக்கும் போக்கில் கபிலர் பாடியுள்ள குறிஞ்சிப்பாட்டு, தோழி அறத்தொடு நிற்றலைக்கூறிப் பின் தலைவியின் அன்பினை உரைத்து, பண்டைக் காலத்தே குறிஞ்சிச் சிறுமிகள் எவ்வெவ்வாறெலாம் ஆடியும், மலர்பல பறித்து மாலைசூடியும், தளிர்பல பறித்துத் தழையுடுத்தியும் மகிழ்ந்தனர் என்பதனைப் புலப்படுத்தி, தலைவன், தலைவி, தோழிகளுக்கிடையே நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் புனைந்துரைத்துத் தலைவன்பால் தலைவி கொண்டுள்ள அன்பின் ஆழத்தை விளக்கித் திகழ்கிறது.

# 1. முல்லைப்பாட்டு

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற

தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவி லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி நிழத்திய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வா லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாளரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
பொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ

தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணு துயங்கு மாசிந் தித்து
மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ்சேர்த்தி நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா டுயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி இழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பருஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே,

## 2. குறிஞ்சிப்பாட்டு

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநா வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறைய முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
வாற்றின் வாரா ராயினு மாற்ற
வேனை யுலகத்து மியைவதா னமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றாஞுச் சிறுமைய ளிவளுந் தேம்பு
மிகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
விருபே ரச்சமோ டியானு மாற்றலென்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்
வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணா
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை

நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குர
னற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
யெற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மரமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி
யுரவுக்கதிர் தெறூஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிரையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிடு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ
யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீ
ரவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
யுள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிள
மெரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடச
மெருவை செருவிளை மணிப்பூங் கருவிளை

பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குறுகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்த
றாழை தளவ முட்டாட் டாமரை
ஞாழல் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்க
மீங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
யடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரந்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவம் நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
யாரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்
புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி

யெரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
வெண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
யீரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
யணிமிகு வரிமிஞி றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத் தாயித ழலரி
யந்தொடை யொருகாழ் வளைஇச் செந்தீ
யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி யம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
யியலணிப் பொலிந்த வீகை வான்கழ
றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வேே விளைஞரி
னுரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளு
முனைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா
மிடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படர
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெம்
அலமர லாயிடை வெரூஉத லஞ்சி
மெல்லிய வினிய மேவரக் கிளந்தெ
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
யசைமென் சாய லவ்வாங் குந்தி

மடமதர் மழைக்க ணிளையி ரிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதலி னல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு
சொல்லும் பழியோ மெல்லிய லீரென
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவி ழலரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குர லவித்தெஞ்
சொல்லற் பாணி நின்றன னாக
இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையேர் நோக்கின் மனையோள் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்தி மகிழ்சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்
திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனு
தரவுற ழஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா லுடற்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திணிநிலைக் கடம்பின் றிரளரை வளைஇய

துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
யடுங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசையல் யாவது
மஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கன னந்நிலை
நாணு முட்கு நண்ணுவழி யடைதர
வொய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
யாக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவி
னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்களம் நந்தி
யரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையா மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிற
லுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி

வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிடும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற
வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
யந்தி யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவை மிசைஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் கானூஉ
நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறித்
துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று
மிரவரன் மாலைய னேவரு தோறுங்
காவலர் கடுகினுங் கதநாய் குரைப்பினு
நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ வின்றுயி லென்றும்
பெறாஅன் பெயரினு முனிய லுறாவு
னிளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றன்னிலை தீர்ந்தன்று மிலனே கொன்னூர்
மாய வரவி னியல்புநினைஇத் தேற்றி
நீரெறி மலரிற் சாஅ யிதழ்சோரா
வீரிய கலுழுமிவள் பெருமதா மழைக்க

ணாகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்கு
லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
துருமுஞ் சூரு மிரைதே ரரவமு
மொடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும்
நூழிலு முழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடரக முடையவா லெனவே.

# எட்டுத்தொகை

## 1. குறுந்தொகை

நாலடி முதற்கொண்டு எட்டடிவரை கொண்டுள்ள அகப்பாடல்கள் குறுந்தொகை எனத் தொகுக்கப் பெற்றது. தொகைநூல்களிலெல்லாம் புறநானூறே முன்னர் தொகுக்கப் பெற்றது என்றாலும் அகப்பாடல்களுள் முதன்முதலில் தொகுக்கப்பெற்ற சிறப்புக் குறுந்தொகைக்கே உண்டு.

உலகின் முதற்பொருள் நிலமும் காலமுமாகும். மலை, காடு, வயல், கடல் இவ்வாறு உலகு அமைந்துளது. கோடை மழை முதலிய காலங்களும், காலை மாலை முதலிய பொழுதுகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. குறித்ததோர் நிலத்தில் குறித்ததோர் பருவம் வந்து கூட, உயிர்த்தோற்றமும் வறட்சியும் வாழ்வும் அவற்றுக்கு ஏற்றாற் போல் ஆங்குக் கருக்கொண்டு செழிக்கக் காண்கிறோம். இத்தகு கால இட கருப்பொருள் பின்னணியில் உயிர்கள், சிறப்பாக மக்கள், அச் சூழலின் தாக்கத்திற் கேற்ப அகத்தெழுச்சி உறுகின்றனர். இத்தகு அகத்து எழுச்சிகளே செய்யுளுக்கு உரிய பொருளாகின்றன. இவற்றைத் தொகுத்து நோக்கினால் காலமும் இடமும் அடிப்படையாகவும் அவற்றால் கருக்கொண்டு, தோன்றும் உலகத்து உயிர்களும் பிறபொருள்களும் பின்னணியாகவும் கொண்டு, அவற்றின் தாக்கத்தாற் அவ்வச் சூழ்நிலைக்குரிய அகத்தெழுச்சியே இலக்கியங்களின், சிறப்பாக அகத்திணை இலக்கியங்களின், அடித்தளம் எனக் கண்டனர் பண்டைத் தமிழ்த் திறனாய்வாளர்கள். அவற்றை முறையே முதல், கரு, உரிப்பொருள் என அமைத்தனர். இத்தகு அமைப்பையே இலக்கியக் கொள்கைகளாகக்கொண்டு அகப்பாடற்குச் சான்றோர் சிலர் உரை எழுதலாயினர். எனவே, இங்கு இடம்பெற்றுள்ள முதல் இருபது குறுந்தொகைப் பாடல்களுக்கு உரிய கூற்றும், விளக்கக் குறிப்பும் மட்டுமே தரப்பெற்றுள்ளன.

பகுதி—அ

## தோழி கூற்று

தலைவன் தோழியின் மூலம் தலைவியைக் காண விழைந்தான். கையுறையாகச் செங்காந்தள் மலரை அளித்துத் தன் குறையைக் கூறினான். அதற்குத் தோழி, "இம்மலர் எம்மலையில் உள்ளது. எனவே வேண்டாம்" என மறுத்தாள்.

1. செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

துறை : தோழி கையுறை மறுத்தது.

ஆசிரியர் : திப்புத் தோளார்.

## தலைவன் கூற்று

தலைவன் தலைவியோடு கூடி மகிழ்ந்தான். அவளது சிறப்பைப் பாராட்ட விரும்பினான். கமழ்கின்ற அவள் கூந்தல் மணத்தைத் துய்த்த தலைவன், 'அந்த மணம் அவள் கூந்தலுக்கு இயற்கையானது. என்று கூறிப் பாராட்ட விழைந்தான். அதனை நேரிடையாகச் சொல்லாமல், வண்டு ஒன்றினை வினாவும் வழியாகப் புலப்படுத்து கிறான்.

2. கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீய றியும் பூவே.

துறை : இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு பட்டு நின்ற தலைமகன் தலைமகளை நாணின் நீக்குதற் பொருட்டு மெய் தொட்டுப் பயிறல் முதலாயின அவண் மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்புதோற்ற நலம் பாராட்டியது.

ஆசிரியர் : இறையனார்.

## தலைவி கூற்று

தலைவன் தலைவியைக் காண வீட்டின் புறத்தே அடர்ந்துள்ள வேலி அருகே வந்து நின்றான். இதனைத் தோழி கண்ணுற்றாள். ஆனால் தலைவி காணவில்லை. கண்ட தோழி, தலைவன் விரைவில் தலைவியை மணந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தில், அவன் நட்பைப் பழித்துக் கூறினாள். அது கேட்ட தலைவி, தலைவன் தன்பால் கொண்டுள்ள அன்பு நிலத்தைவிட உறுதியானது; வானைவிடச் சிறந்தது; கடலைக் காட்டிலும் ஆழமுடையது என்று கூறிச் சிறப்பித்தாள்.

**3.** ***நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று***
***நீரினு மாரள வின்றே சாரற்***
***கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.***

**துறை :** தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்த வழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

**ஆசிரியர் :** தேவகுலத்தார்.

## தலைமகள் கூற்று

தலைவன் பிரிந்தான். தலைவி வருந்துகின்றாள் என்று மிகக் கவலை உற்றாள் தோழி. அதனைக் கண்ட தலைவி, தலைவன் தனக்கு முன்பு செய்த அன்புச்செயல்களை எண்ணித் தான் ஆற்றுவள் என்பதாகச் சொன்னாள்.

**4.** ***நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே***
***இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி***
***அமைதற் கமைந்தநங் காதலர்***
***அமைவில ராகுத னோமென் னெஞ்சே.***

**துறை :** பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

**ஆசிரியர் :** காமஞ்சேர் குளத்தார்.

## தலைவி கூற்று

தலைவன் பிரிந்தான். தலைவி வருந்தினாள். அதனை அறிந்த தோழி கவலை அடைந்தாள். அப்போது தானுறும் காமத் துன்பத்தைக் கண்கள் துயிலாமையின்மூலம் தலைவி உணர்த்தினாள்.

5. அதுகொ றோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே.

துறை : பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஆசிரியர் : நரிவெரூஉத் தலையார்.

## தலைவி கூற்று

வரைவு இடைவைத்துத் தலைவன் பிரிந்தான். தலைவன் பிரிவைத் தாங்க இயலாதவள். ஆயினள் தலைவி இரவெல்லாம் அவளுக்கு உறக்கமில்லை. தன்னைச் சுற்றியுள்ள தோழி முதலிய அனைவரும் உறங்கி விட்டார்கள். உலகெலாம் உறங்கும் இரவிலும் உறங்காது அவன் நினைவால் வருந்தும் தன் நிலையை இப்பாடல் மூலம் உணர்த்து கின்றாள்.

6. நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

துறை : வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது.

ஆசிரியர் : பதுமனார்.

## கண்டோர் கூற்று

தலைவனும் தலைவியும் அன்பு கொண்டனர்; மணந்துகொள்ள விழைந்தனர். அதற்குத் தலைவியின் பெற்றோர் உடன்படவில்லை. எனவே ஒருநாள் தலைவி பெற்றோரைவிட்டு உடன்போக்காகத் தலைவனுடன் போய்விடுகின்றாள். அவ்வாறு அவர்கள் செல்லும் போது, எதிரே வந்த சிலர் தலைவியின் காலிற் சிலம்பு விளங்குதலைக் கண்டு, அவ்விருவருக்கும் திருமணம் நிகழவில்லை என்பதை உணர்ந்து வருந்திப் பின்வருமாறு தமக்குள் கூறினார்கள்.

7. வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

துறை : செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியது.

ஆசிரியர் : பெரும்பதுமனார்.

## காதற்பரத்தை கூற்று

தலைவன் பரத்தை ஒருத்தியின்பால் காதல் கொண்டான். அது கண்டு தலைவி, தலைவனைத் தன் வயப்படுத்திக்கொண்டு, பரத்தையை இகழ்ந்துரைத்தாள். அதனை அறிந்த காதற்பரத்தை. தலைவிக்குத் தொடர்பானவள் கேட்குமாறு, ''எம்மிடம் பெருமிதமாகப் பேசிய தலைவன், தலைவி முன்னே அடங்கி ஒடுங்கிப்போனன். அதனால்தான், அவள் என்னை இவ்வாறு இகழ்கிருள்'' என்று எடுத்துரைத்தாள். இந்தப் பாடல் சிறந்த உள்ளுறை உவமைகளைக் கொண்டு விளங்கு கின்றது.

8. கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் முய்க்கே.

துறை : கிழத்தி, தன்னைப் புறனுரைத்தாளெனக் கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

ஆசிரியர் : ஆலங்குடி வங்கனார்.

## தோழி கூற்று

பரத்தைபால் சென்ற தலைமகன் மீண்டான். தலைவி தோழியின் வாயிலாய் தலைவனைக் காண விழைந்தாள். அப்போது தோழி, "தலைவா! தலைவி உன் குறையை எங்களுக்கும் மறைக்கின்ற பெருங்கற்பினள். எனவே நின்னைச் சினந்துரைக்க மாட்டாள்" என்று கூறி, தலைவியைக் காண்பது தலைவனுக் கியலுமென்று குறிப்பாகப் புலப்படுத்தினாள்.

9. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னாணிக் கரப்பா டும்மே.

துறை : தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

ஆசிரியர் : கயமனார்.

## தோழி கூற்று

தலைவன் பரத்தையை நாடித் தலைவியைப் பிரிந்தான். மீண்டு வந்தவன் தலைவியைக் காண அஞ்சித் தோழியின் உதவியை நாடினான். அவற்குத் தோழி, "தலைவன் செய்தது பெருங் கொடுமையே யானாலும், அதனைத் தன் பெருங்கற்புத்திறத்தால் மறைத்து, அவன் நாணுமாறு அவனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் தலைவி உள்ளாள்" எனச் சொல்லுதல்.

யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே.

துறை : தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

ஆசிரியர் : ஓரம்போகியார்.

## பகுதி—ஆ

### தலைவி கூற்று

தலைவன் பிரிந்தான். தலைவி ஆற்றாளாயினள். நெஞ்சினை நோக்கி "நெஞ்சே! வளைநெகிழ உடல் மெலிந்தது உறக்கமும் போயிற்று; துயருற்றேன்; இங்ஙனம் தனியே இருந்து வருந்துவதைக் காட்டிலும், தனித்துத் தலைவன் எத்துணைச் சேய்மையில் இருந்தாலும், அங்குச் சென்று காண்பதே நலம்" என்று சொன்னாள்.

11. கோடீ ரிலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவ ணுறைதலு முய்குவ மாங்கே
எழுவினி வாழியென் னெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே.

துறை : தலைமகள், தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

ஆசிரியர் : மாமூலனார்.

### தலைவி கூற்று

தலைவி பிரிவாற்றாமல் வருந்துகின்றாள் என்று தோழி கவலை உற்றாள். அது கேட்ட தலைவி, தலைவன் பிரிந்து சென்ற வழியின் கேடுகளை நினைத்துத் தான் வருந்துகிறாளே யன்றி, தனக்காகத் தன்னின்பத்திற்காக வருந்தவில்லை என்ற உண்மையை, இந்த ஊரும் தோழியுமுணராமல் வேறொன்றைக் கூறுகின்றார்களே யென்று தோழிக்குச் சொல்லுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

12. எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவவர் சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.

துறை . ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஆசிரியர் : ஓதலாந்தையார்,

## தலைவி கூற்று

தலைவன் தலைவியைத் தோழியின் மூலம் கூடிப் பிரிந்தான். அதனை நினைத்துத் தலைவி வருந்தினாள். அதனால் அவள் உடலில் தோன்றிய வேறுபாடுகளை எண்ணித் தோழி வருந்தினாள். அவட்குத் தலைவி, தன் ஆற்றாமைக்குக் காரணமாகிய தன் நெஞ்சத் துயரையும், கண்கள் பொலிவிழந்து பசலை அடைந்ததையுங் கூறினாள்.

*13.* ***மாசறக் கழீஇய யானை போலப்***
***பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்***
***பைத லொருதலைச் சேக்கு நாடன்***
***நோய்தந் தனனே தோழி***
***பசலை யார்ந்தன குவளையங் கண்ணே.***

**துறை :** தலைவன் தோழியிற் கூட்டங்கூடி, ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய, வேறுபட்ட கிழத்தி, தோழிக்கு உரைத்தது.

**ஆசிரியர் :** கபிலர்.

## தலைவன் கூற்று

தலைவன் தலைவியைக் கண்டு பேசும் வாய்ப்பு ஏற்படவில்லை. தோழியை நாடினான். அவள் உதவ மறுத்துவிட்டாள். அப்போது தலைவன், தோழி கேட்குமாறு, 'இவள்பால் அன்பு கொண்டவன் இவன் என ஊரெல்லாம் அறியுமாறு மடலூர்ந்து வீதியிற் செல்வேன்' என்றான்.

*14.* ***அமிழ்துபொதி செந்நா வஞ்ச நிவந்த***
***வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்***
***பெறுகதி லம்ம யானே பெற்றாங்***
***கறிகதி லம்மவிவ் வூரே மறுகில்***
***நல்லோள் கணவ னிவனெனப்***
***பல்லோர் கூறயாம் நாணுகஞ் சிறிதே.***

**துறை :** "மடன்மாகூறு மிடனுமாருண்டே" என்பதனால், தோழி குறை மறுத்துழித் தலைமகன், மடலேறுவ லென்பதுபடச் சொல்லியது.

**ஆசிரியர் ;** தொல்கபிலர்.

## செவிலித்தாய் கூற்று

தமரைப் பிரிந்து தலைவி தலைவனுடன் உடன்போக்காகச் சென்று விட்டாள். இதனைத் தோழிமூலம் செவிலி அறிந்தாள். அறிந்தவள் தலைவியைப் பெற்ற நற்றாய்க்குப் பின்வருமாறு கூறினாள்: "அந்த இளைஞனோடு நம் மடந்தையின் திருமணம் இதற்குள் நிறைவேறி யிருக்கும்; அனைவருமறிய அவர்கள் கணவன் மனைவியராய் இல்லறத்தில் ஈடுபட்டிருப்பர்."

**15.** *பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு*
*தொன்மு தாலத்துப் பொதியிற் றோன்றிய*
*நாலூர்க் கோசர் நன்மொழி போல*
*வாயா கின்றே தோழி யாய்கழற்*
*சேயிலை வெள்வேல் விடலையொடு*
*தொகுவளை முன்கை மடந்தை நட்பே.*

**துறை :** உடன்போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

**ஆசிரியர் :** ஔவையார்.

## தோழி கூற்று

கணவன் மனைவியைப் பிரிந்து பொருள் சேர்ப்பதற்காகப் போனான். அப்போது தலைவி, பிரிந்து சென்ற கணவர் தன்னை மறந்து விடுவாரோ என்று கவலையுற்றாள். அப்போது தோழி, தலைவியை நோக்கி, "நின் அன்பர் சென்ற பாலைநிலத்தில் ஆண்பல்லி பெண் பல்லியை அழைக்கின்ற ஓசை அவருக்கு நின்னை நினைவூட்டும்; எனவே மறவார்; மீண்டு வருவார்" என்று கூறி ஆற்றினாள்.

**16.** *உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்*
*பொன்புனை பகழி செப்பங் கொண்மார்*
*உகிர்நுதி புரட்டு மோசை போலச்*
*செங்காற் பல்லி தன்றுணை பயிரும்*
*அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.*

**துறை :** பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றுமை கண்டு தோழி கூறியது.

**ஆசிரியர் :** பாலை பாடிய பெருங்கடுங்கோ.

## தலைவன் கூற்று

தலைவியைக் காணத் தலைவன் வேண்டியபோது தோழி உதவ மறுத்தாள். அப்போது தலைவன் தன் நிலையை உலகியலில் வைத்துப் பின்வருமாறு தோழிக்கு உணர்த்துகின்றான். "காமத்தின் தாக்குதலுக்காளானவர்கள் குதிரை எனப் பனைமடலூர்வர், மலையில் ஏறி குதித்து உயிரும் விடுவர்" என்று, தான் மடலேறுங் கருத்தைக் குறிப்பாக உணர்த்தினான்.

17. மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே.

துறை : தோழியிற் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன் தோழி குறைமறாமற் கூறியது.

ஆசிரியர் : பேரெயின் முறுவலார்

## தோழி கூற்று

தலைவன் அவ்வப்போது இரவில் வந்து தலைவியைக் கூடிப் பிரிந்து சென்று கொண்டிருந்தான். இடையிடையே அவன் வருதற்குத் தடைநேர்ந்தபோது, தலைவி காமத் துன்பத்தைத் தாங்க இயலாது வருந்தினாள். இதனைத் தலைவனுக்குப் புலப்படுத்தி விரைவில்மணந்து கொண்டு வாழுமாறும், வேற்று வரைவிலிருந்து தலைவியைக் காக்குமாறும், தோழி தலைவனுக்கு உணர்த்தினாள். இந்தப் பாடல் இனிய குறிப்புப் பொருள் கொண்டு விளங்குகின்றது.

18. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

துறை : இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப் பட்டு வரைவு கடாயது.

ஆசிரியர் ; கபிலர்,

பகுதி—(அ)

## பசிப்பிணி மருத்துவன்

1\. *யான்வாழு நாளும் பண்ணன் வாழிய*
*பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை*
*யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன*
*ஊணொலி யரவந் தானுங் கேட்கும்*
*பொய்யா வெழிலி பெய்விட நோக்கி*
*முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்*
*சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்*
*சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்*
*இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டும்*
*மற்றும் மற்றும் வினவுதுந் தெற்றெனப்*
*பசிப்பிணி மருத்துவ னில்லம்*
*அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே.*

திணை : பாடாண் திணை; துறை : இயன் மொழி.

ஆசிரியர் : பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடியது.

## நீ தேரன்றினே

2\. *அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்*
*சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா*
*திருள்கண் கெடுத்த பருதி ஞாலத்*
*திடும்பைகொள் பருவர றீரக் கடுந்திறல்*
*அஞ்சன வுருவன் றந்து நிறுத்தாங்*
*கரசிழந் திருந்த வல்லற் காலை*
*முரசெழுந் திரங்கு முற்றமொடு கரைபொரு*
*திரங்குபுன னெரிதரு மிகுபெருங் காவிரி*
*மல்ல னன்னாட் டல்ல றீரப்*
*பொய்யா நாவிற் கபிலன் பாடிய*
*மையணி நெடுவரை யாங்க ணொய்யெனச்*

செருப்புகன் மறவர் செல்புறங் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி யக்குடை
புதுமையி னிறுத்த புகழ்மேம் படுந
விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூட்
சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தன னாகலின்
ஆறுகொல் மருங்கின் மாதிரந் துழவும்
கவலை நெஞ்சத் தவலம் தீர
நீதோன் றினையே நிரைத்தா ரண்ணல்
கல்கண் பொடியக் கானம் வெம்ப
மல்குநீர் வரைப்பிற் கயம்பல வுணங்கக்
கோடை நீடிய பைதறு காலை
இருநில நெளிய வீண்டி
உறுமுரறு கருவிய மழைபொழிந் தாங்கே.

**திணை :** வாகை. **துறை :** அரசவாகை

**ஆசிரியர் :** மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

என் நெஞ்சந் திறப்போர் நிற்காண்குவர்

3\. எந்தை வாழி யாத னுங்கவென்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் நிலைய
மலர்வாய் மண்டிலத் தன்னநாளும்
பலர்புர வெதிர்ந்த வறத்துறை நின்னே.

**திணை :** பாடாண்திணை; **துறை :** இயன்மொழி.

**ஆசிரியர் :** ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது.

## இல்லோர் சொன்மலை

4. ஒரை யாயத் தொண்டொடி மகளிர்
கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்
யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்
தேனா றாம்பற் கிழங்கொடு பெறூஉம்
இழுமென வொலிக்கும் புனலம் புதவிற்
பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
இல்லோர் சொன்மலை நல்லியக் கோடனை
உடையை வாழியெற் புணர்ந்த பாலே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
ஒரு ருண்மையி னிகழ்ந்தோர் போலக்
காணாது கழித்த வைகல் காணா
வழிநாட் கிரங்குமென் னெஞ்சமவன்
கழிமென் சாயல் காண்டொறு நினைந்தே.

திணை : பாடாண்டிணை. துறை : இயன்மொழி.

ஆசிரியர் : ஒய்மான் நல்லியக் கோடனைப் புறத்திணை நன்னாகனார் பாடியது.

## சீர்சால் வைகறை

5. ஒளிறுவாண் மன்ன ரொண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்னாட் டிரங்கிப்
பாடிப் பெற்ற பொன்னணி யானை
தமரெனின் யாவரும் புகுப வமரெனிற்
றிங்களு நுழையா வெந்திரப் படுபுழைக்
கண்மாறு நீட்ட நணிநணி யிருந்த
குறும்பல் குறும்பிற் றதும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்க ணாடவர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டற னல்யாற் றெக்க ரேறிக்
கருங்கனி நாவ லிருந்துகொய் துண்ணும்
பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்
டெயினர் தந்த வெய்ம்மா னெறிதசைப்

பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனங் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச் சீர்சா லாதே.

திணை : பாடாண்டிணை; துறை : இயன்மொழி.

ஆசிரியர் : மல்லிகிழான் காரியாதியை ஆவூர் மூலங்கிழார் பாடியது.

## பெரும்பெயர்ச் சாத்தன்

6. கந்துமுனிந் துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி யாலு மாங்கண்
மணன்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணா ராயினுந் தன்னொடு சூளுற்
றுண்மென விரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்
ஈண்டோ வின்சா யலனே வேண்டார்
எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்
கள்ளுடைக் கலத்த ருள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்
அஞ்சி நீங்குங் காலை
ஏம மாகத் தான்முந் துறுமே.

திணை : வாகை. துறை : வல்லாண் முல்லை.

ஆசிரியர் : பாண்டியன் கீரஞ்சாத்தனை அவர் பாடியது.

## இரவன் மண்டை மலர்ப்போர் யார்

7. ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்த்தவென் னிரவன் மண்டை
மலர்ப்போர் யாரென வினவலின் மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
திருவீழ் நுண்பூட் பாண்டியன் மறவன்
படைவேண்டுவழி வாளுதவியும்
வினைவேண்டுவழி யறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் றேஎத்

தசைநுகம் படாஅ வாண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்
பருந்துபசி தீர்க்கும் நற்போர்த்
திருந்துவே னாகற் கூறினர் பலரே.

திணை : வாகை; துறை : வல்லாண் முல்லை.

ஆசிரியர் : நாலை கிழவன் நாகனை வடநெடுந்தத்தனார் பாடியது.

## பாண்பசிப் பகைஞன்

8. நிரப்பாது கொடுக்குஞ் செல்வமு மிலனே
இல்லென மறுக்குஞ் சிறுமையு மிலனே
இரையுறு விழுமந் தாங்கி யமரகத்
திரும்புசுவைக் கொண்ட விழுப்புணோய் தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்
தீர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே.

திணை : வாகை; துறை : வல்லாண்முல்லை;
பாணாற்றுப் படையுமாம்.

ஆசிரியர் : ஈந்தூர்கிழான் தோயன் மாறனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது,

## வாய்வாட் பண்ணன்

9. மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
கருங்க ணெயிற்றி காதன் மகனொடு
கான விரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்
பெருங்குறும் புடுத்த வன்புல விருக்கை
புலாஅ வம்பிற் போரருங் கடிமிளை
வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்

உண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டின்
இன்னே சென்மதி நீயே சென்றவன்
பகைப்புலம் படரா வளவை நின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே.

**திணை :** வாகை; **துறை :** பாணாற்றுப் படையுமாம்.

**ஆசிரியர் :** வல்லார்கிழான் பண்ணனைச் சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந் தும்பியார் பாடியது.

## உண்டாலம்ம இவ்வுலகம்!

*10.* உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

**திணை :** பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.
**ஆசிரியர் :** கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு.

## கற்றல் நன்றே!

*11.* உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடையோ னாறரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே.

**திணை :** பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

**ஆசிரியர் :** பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாட்டு.

## யானை புக்க புலம்!

12. காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மேல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானைபுக்க புலம் போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே.

திணை : பாடாண்டிணை; துறை : செவியறிவுறூஉ.

ஆசிரியர் : பாண்டியன் அறிவுடை நம்பியுழைச் சென்ற பிசிராந்தையார் பாடியது.

## காவல் சாகாடு

13. கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
உய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக்காஞ்சி.
ஆசிரியர் : தொண்டைமான் இளந்திரையன் பாட்டு.

## மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

14. நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால் யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.
ஆசிரியர் : மோசிகீரனார் பாடியது.

## எவ்வழி நல்லவர் அவ்வழி நல்லை

15. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

ஆசிரியர் : ஔவையார் பாடியது.

## பகுதி—(ஆ)

## மயக்குறு மக்கள்

1. படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

ஆசிரியர் : பாண்டியன் அறிவுடை நம்பி பாட்டு.

## செல்வத்துப் பயனே ஈதல்

2. தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவர்க்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
அதனால், செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

ஆசிரியர் : மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

## புலி பசித்தன்ன மெலிவில் உள்ளம்

3. விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியாரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ.

**திணை :** பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

**ஆசிரியர் :** சோழன் நல்லுருத்திரன் பாட்டு.

## யாண்டு பலவாக நரையில

4. யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

**திணை :** பொதுவியல்; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

**ஆசிரியர் :** கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரை, 'கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கில்லையாலோ?' என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது.

## திறவோர் காட்சி

5. யாது மூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேயாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

ஆசிரியர் : கணியன் பூங்குன்றன் பாட்டு.

## உய்தலும் கூடும்

6. அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவ னாட்டும் புல்வாய் போல
ஓடி யுய்தலுங் கூடும்மன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.

திணை : பொதுவியல்; துறை : பொருண்மொழிக் காஞ்சி.

ஆசிரியர் : ஓரேருழவர் பாட்டு.

## இனிய காண்க!

7. ஓரி னெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னா தம்மவிவ் வுலகம்
இனிய காண்கித னியல்புணர்ந் தோரே.

திணை : பொதுவியல்; துறை : பெருங்காஞ்சி.

ஆசிரியர் : பக்குடுக்கை நன்கணியார் பாடியது

## அல்லது செய்தல் ஓம்புமின்

8. பல்சான் றீரே பல்சான் றீரே
கயன் முள்ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

**திணை :** பொதுவியல் ; **துறை :** பொருண்மொழிக் காஞ்சி.

**ஆசிரியர் :** நரிவெரூஉத் தலையார் பாடியது.

## காணாது கண்டனம்

9. ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலு மிரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
ஒல்லா தொல்லு மென்றலு மொல்லுவ
தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை
அனைத்தா கியரினி யிதுவே யெனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டன மதனால்
நோயில ராகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வ லத்தை சிறக்கநின் றாளே.

**திணை :** பாடாண்டிணை; **துறை :** பரிசில் கடா நிலை.

**ஆசிரியர் :** பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தானை ஆலூர் மூலங்கிழார் பாடியது.

## உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளோம்!

10. வளிநடந் தன்ன வார்செல லிவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரினி ரெனாஅக்
கடல்கண் டன்ன வொண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்குங் களிற்றின ரெனாஅ
உறுமுரற் றன்ன வுட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றிய ரெனாஅ
மண்கெழு தானை யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே
எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்தும்
உணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளோம்
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே.

திணை : பாடாண்டிணை; துறை : பரிசில் கடாநிலை.

ஆசிரியர் : சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன் பரிசில் நீட்டித்தானைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

## துளிநசைப் புள்

11. அருவி தாழ்ந்த பெருவரை போல
ஆரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக்
கடவுள் சான்ற கற்பின் சேயிழை
மடவோள் பயந்த மணிமரு ளவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தித்
திண்டேர் ரன்ன னிற்பா ராட்டிக்
காதல் பெருமையிற் கனவினு மாற்றுமென்
காமர்நெஞ்ச மேமாந் துவப்ப

ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்
வேல்கெழு குரிசில் கண்டே னாதலின்
விடுத்தனென் வாழ்கநின் கண்ணிதொடுத்த
தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாகப்
பணித்துக்கூட் டுண்ணுந் தணிப்பருங் கடுந்திறல்
நின்னோ ரன்னநின் புதல்வ ரென்றும்
ஒன்னார் வாட வருங்கலந் தந்துநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
முன்னோர் போல்கிவர் பெருங்கண் ணோட்டம்
யாண்டும் நாளும் பெருகி யீண்டுதிரைப்
பெருங்கட னீரினு மக்கடன் மணலினும்
நீண்டுயர் வானத் துறையினு நன்றும்
இவர்பெறும் புதல்வர்க் காண்டொறும் நீயும்
புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடு வாழிய நெடுந்தகை யானும்
கேளில் சேஎய் நாட்டினெந் நாளும்
துளிநசைப் புள்ளி னளிநசைக் கிரங்கிநின்
அடிநிழல் பழகிய வடியுறை
கடுமான் மாற மறவா தீமே.

திணை : பாடாண்டிணை; துறை : பரிசில் கடாநிலை.

ஆசிரியர் : பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் பாடியது.

## களிகொள் புள்ளினம்

12\. கடவு ளாலத்துத் தடவுச்சினைப் பல்பழம்
நெருந லுண்டன மென்னாது பின்னும்
செலவா னாவே களிகொள் புள்ளினம்
அனையர் வாழியோ ரிரவல ரவரைப்
புரவெதிர் கொள்ளும் பெருஞ்செய் யாடவர்
உடைமை யாகுமவ ருடைமை
அவர், இன்மை யாகு மவரின் மையே.

திணை : பாடாண்டிணை; துறை : பரிசில் கடாநிலை.

ஆசிரியர் : பெரும்பதுமனார் பாட்டு.

## பரந்தோங்கு சிறப்பின் பாரி மகளிர்

13. பணிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப!
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேற்
களங்கொண்டு கனலுங் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தண னீயே
வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையு ணாடுகிழ வோயே.

திணை : பாடாண்டிணை; துறை : பரிசிற்றுறை.

ஆசிரியர் : பாரி மகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

# பதினென் கீழ்க்கணக்கு

## 3. திருக்குறள்

தமிழனை, மண்ணில் நல்லவனாய், வாழ வல்லவனவாய், தெய்வத்துள் வைக்கப்பெறும் மாமனிதனாய் உருவாக்க நினைந்து, ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன், திருவள்ளுவப் பெருந்தகை இயற்றிய நூலே திருக்குறளாகும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பாலாக, நூற்று முப்பத்து மூன்று அதிகாரங் களாக அமைந்துள்ள இந்நூலில், ஆயிரத்து முந்நூற்று முப்பது பாடல்கள் உள்ளன. இது பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள்* ஒன்று.

இதன் சிறப்புகள் பல. காலம் இடம் கடந்து எக்காலத்தார்க்கும் எந்நாட்டார்க்கும் பெரிதும் பயன்தரும் நூலிது. இதன்கண் விளங்கு கின்ற கருத்துக்கள், சாதி, மொழி, இன, சமயக் கட்டுக்கள் பலவற்றைப் பெரிதும் கடந்து திகழ்வன. இறைவனை நினைந்தும் மனிதனை மறவாமலும் மானிட வாழ்வையும் மெய்யுணர்வையும் துய்ப்பதற்கு உரிய வழிவகைகளை வழங்குகின்ற உலகநூல்களுள் தலைசிறந்த இடம் இதற்கு உண்டு.

தமிழரே அன்றி உலகவர் பலரும் தத்தம் மொழிகளில் திருவள்ளுவர் கருத்தினைப் பெயர்த்தெடுத்துக் கற்கின்றனர். தமிழன் ஒவ்வொருவனும் தவறாது 'கற்கவேண்டிய தமிழ் மறையாகவும் இது போற்றப்பெறுகிறது.

அறத்திற்கும் இன்பத்திற்கும் துணையாகிய பொருட்பாலி லிருந்து முதல் பத்து அதிகாரங்கள் இத்திரட்டில் இடம் பெற்றுள்ளன. பிற உயிர்களிலிருந்து மானிடனைப் பிரித்து உயர்த்தும் அவன்றன் அறிவாற்றலினை மையமாகக் கொண்டன இப் பத்ததிகாரங்கள் இவற்றின்மூலம் ஒருவன் பெறும் தெளிவும் திண்மையும் அவன் நன்கு வாழவும், அவன் வாழும் சமுதாயம் நலம்பெற்று வளரவும் துணை செய்வன. ஆயினமையின், அவை இங்குச் சிறப்பாக எடுத்துத்தரப் பெற்றுள்ளன.

---

*'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.'

# திருக்குறள்

## பகுதி—(அ)

## இறைமாட்சி

1. படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

2. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.

3. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு.

4. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு.

5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

6. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

10. கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.

## கல்வி

1. கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்,

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

7. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

9. தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

## கல்லாமை

1. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

2. கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

3. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

4. கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

6. உளரென்னும் மாத்திரையர் அல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

9. மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

## கேள்வி

1. செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

3. செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

4. கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாந் துணை.

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்
தீண்டிய கேள்வி யவர். [துணர்ந்

8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

9. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.

10. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

## அறிவுடைமை

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

2. சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

5. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு.

6. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்.

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

பகுதி—(ஆ)

## குற்றங் கடிதல்

1. செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

2. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

3. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழி நாணுவார்.

4. குற்றமே காக்க பொருளாக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.

5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு.

7. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

10. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

## பெரியாரைத் துணைக்கோடல்

1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

3. அறியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

6. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

7. இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

9. முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை.

10. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

## சிற்றினம் சேராமை

1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

2. நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

3. மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல்.

4. மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு.

5. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

6. மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை.

7. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

8. மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து.

9. மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து.

10. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

## தெரிந்து செயல்வகை

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

2. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

3. ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

4. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

5. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

9. நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

## வலியறிதல்

1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

2. ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர்.

4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

5. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

6. நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

7. ஆற்றின் அளவறிந்து ஈக அது பொருள்
போற்றி வழங்கும் நெறி.

8. ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கேடும்.

10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

# பண்டைக் காப்பியம்

## 4. சிலப்பதிகாரம்

தமிழனைத் திருக்குறள் மாமனிதனாக உருவாக்கும் எனில் சிலப்பதிகாரம் அவனை முதன்முதலில் தமிழனாக வாழ வழிகாட்டும் காப்பியம் என்று கூறலாம். இயல், இசை, நாடகங்களாகிய முத்தமிழையும், சேர, சோழ, பாண்டிய முந்நாடுகளையும், அறம், பொருள், இன்பமாகிய முப்பொருள்களையும், பண்டைத் தமிழகம் பெற்றிருந்த பாங்கினை நற்றமிழால் உணர்த்தும் நல்ல நூல் இது.

சங்க காலத்தை ஒட்டி எழுந்த சமுதாய, சமயக் கோட்பாட்டுக் குழப்பங்களுக்கிடையே, தமிழன் வாழ்வில் கொள்ளவேண்டிய குறிக்கோள்களை நெஞ்சையள்ளும் இலக்கியப்போக்கில் அமைத்து, இந் நூலை அருளிய பெருமகனார் இளங்கோ அடிகளாவர். வடமொழியில் விளங்கும் இராமாயணத்தைப்போல, மேற்கு மொழிகளில் திகழுகின்ற இலியத்தைப்போல, தமிழ் மொழியின் முதற் காப்பியமாகவும், முதன்மைக் காப்பியமாகவும் விளங்குவது இது.

கண்ணகியைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு, கோவலன் வாழ்வைப் புனைந்துரைக்கும் இளங்கோ அடிகள் உள்ளம், ஒரு தமிழ் நாட்டினை, உலகத் தமிழ்நாட்டினைக் காண விழைந்த விழைவுகளெல்லாம், இக் காப்பியத்தில் ஊடும் பாவுமாய் இழையோடக் காணலாம்.

புகார் மதுரை வஞ்சி எனும் மூன்று காண்டங்களையும் முப்பது பகுதிகளாகக் கொண்டமைந்துள்ள இக் காப்பியத்துள், புகார்க் காண்டத்தின் இறுதியில் அமைந்துள்ள வேனிற்காதையும், கனாத் திறம் உரைத்த காதையும் இங்கு இடம் பெற்றுள்ளன. இக் காதைகள் மாதவி மனநிலையையும், கண்ணகி மாண்பினையும், கோவலன் தடுமாற்றத்தையும் எடுத்துரைத்துக் காப்பியத்தின் தலைசிறந்த மாந்தர் மூவரையும் நன்கு அறிமுகப்படுத்துகின்றன. பண்டைத் தமிழ் இயல், இசை, கூத்து மூன்றும் நன்கு எடுத்தியம்பப் பெற்றுள்ளன. மேலும் கண்ணகி காணும் கனவு தொடர்ந்து மதுரைக்காண்டத்திலும் வஞ்சிக்காண்டத்திலும் இடம் பெறப் போகும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்துள்ள பாங்கும் இங்குக் கருதத் தக்கது.

## சிலப்பதிகாரம்

### பகுதி—(அ)

### வேனிற் காதை

நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையும்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரும்
அரைசு வீற்றிருந்த வுரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில் வந்தன னிவணென
வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
இளங்காற் றூத னிசைத்தன னாதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகரறு கோலங் கொள்ளுமென் பதுபோல்
கொடிமிடை சோலைக் குயிலோ னென்னும்
படையுள் படுவோன் பணிமொழி கூற
மடலவிழ் கானற் கடல்விளை யாட்டினுட்
கோவல னூடக் கூடா தேகிய
மாமலர் நெடுங்கண் மாதவி விரும்பி
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளி யேறி மாணிழை
தென்கடல் முத்துந் தென்மலைச் சந்தும்
தன்கட னிறுக்குந் தன்மைய வாதலிற்
கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து
மையறு சிறப்பிற் கையுறை யேந்தி
அதிரா மரபின் யாழ்கை வாங்கி
மதுர கீதம் பாடினள் மயங்கி
ஒன்பான் விருத்தியுட் டலைக்கண் விருத்தி
நன்பா லமைந்த விருக்கைய ளாகி
வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி

இடக்கை நால்விரல் மாடகந் தழீஇச்
செம்பகை யார்ப்பே கூட மதிர்வே
வெம்பகை நீக்கும் விரகுளி யறிந்து
பிழையா மரபி னீரேழ் கோவையை
உழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி
இணைகிளை பகைநட் பென்றிந் நான்கின்
இசைபுணர் குறிநிலை யெய்த நோக்கிக்
குரல்வா யிளிவாய்க் கேட்டன ளன்றியும்
வரன்முறை மருங்கி னைந்தினு மேழினும்
உழைமுத லாகவு முழையீ றாகவும்
குரன்முத'லாகவுங் குரலீ றாகவும்
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியன் மருதமும் பெருகியன் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெறநோக்கி
மூவகை யியக்கமு முறையுளிக் கழிப்பித்
திறத்து வழிப்படூஉந் தெள்ளிசைக் கரணத்துப்
புறத்தொரு பாணியிற் பூங்கொடி மயங்கிச்
சண்பக மாதவி தமாலங் கருமுகை
வெண்பூ மல்லிகை வேரொடு மிடைந்த
அஞ்செங் கழுநீ ராயிதழ்க் கத்திகை
எதிர்பூஞ் செவ்வி யிடைநிலத் தியாத்த
முதிர்பூந் தாழை முடங்கல்வெண் தோட்டு
விரைமலர் வாளியின் வியனில மாண்ட
ஒருதனிச் செங்கோ லொருமக னாணையின்
ஒருமுக மன்றி யுலகுதொழு திறைஞ்சும்
திருமுகம் போக்குஞ் செவ்விய ளாகி
அலத்தகக் கொழுஞ்சே றளைஇ யயலது
பித்திகைக் கொழுமுகை யாணி கைக்கொண்டு
மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனி லிளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்க டந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியி னல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ தறிந்தீ மின்னென
எண்ணெண் கலையு மிசைந்துடன் போகப்

பண்ணுந் திறனும் புறங்கூறு நாவில்
தளைவா யவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை யெழுதிப்
பசந்த மேனியள் படருறு மாலையின்
வசந்த மாலையை வருகெனக் கூஉய்த்
தூமலர் மாலையிற் றுணிபொரு ளெல்லாம்
கோவலற் களித்துக் கொணர்க வீங்கென
மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்பத்
திலகமு மளகமுஞ் சிறுகருஞ் சிலையும்
குவளையுங் குமிழுங் கொவ்வையுங் கொண்ட
மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு
காதலிற் றோன்றிய கண்கூடு வரியும்
புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதருங் காமர் செவ்வியிற்
பாகுபொதி பவளந் திறந்துநிலா வுதவிய
நாகிள முத்தி னகைநலங் காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்
அந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையும்
களிமயிற் சாயலுங் கரந்தன ளாகிச்
செருவேன் னெடுங்கட் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலும்
சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவுங்
கலம்பெறா நுசுப்பினள் காத னோக்கமொடு
திறத்துவே றாயவென் சிறுமை நோக்கியும்
புறத்துநின் றாடிய புன்புற வரியும்
கோதையுங் குழலுந் தாதுசே ரளகமும்
ஒருகாழ் முத்தமுந் திருமுலைத் தடமும்
மின்னிடை வருத்த நன்னுத றோன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியின்
இருபுற மொழிப்பொருள் கேட்டன ளாகித்
தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்

கிளர்ந்து வேறாகிய கிளர்வரிக் கோலமும்
பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
என்னுறு கிளைகட்குத் தன்னுறு துயரம்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி யன்றியும்
வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி வரியும்
அடுத்தடுத் தவர்முன் மயங்கிய மயக்கமும்
எடுத்தவர் தீர்த்த வெடுத்துக்கோள் வரியும்
ஆடன் மகளே யாதலி னாயிழை
பாடுபெற் றனவப் பைந்தொடி தனக்கென
அணித்தோட்டுத் திருமுகத் தாயிழை யெழுதிய
மணித்தோட்டுத் திருமுக மறுத்ததற் கிரங்கி
வாடிய உள்ளத்து வசந்த மாலை
தோடமர் கோதைக்குத் துனைந்துசென் றுரைப்ப
மாலை வாரா ராயினு மாணிழை
காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
பூமல ரமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.

வெண்பா

செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தார்
இளவேனில் வந்ததா லென்னாங்கொ லின்று
வளவேனற் கண்ணி மனம்.

ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னாணை
கூடுமி னென்று குயில்சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாள் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கலந்தாய் காண்.

பகுதி—(ஆ)

## கனாத்திற முரைத்த காதை

அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலங் கொடியிடையார் தாங்கொள்ள மேலோர்நாள்
மாலதி மாற்றுண் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் றான்சோர மாலதியும்
பார்ப்பா னொடுமனையா ளென்மேற் படாதனவிட்
டேற்பன கூறாரென் றேங்கி மகக்கொண்
டமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான்கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கெங்கும்
தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்
பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்
கேசும் படியோ ரிளங்கொடியா யாசிலாய்
செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே கையிற்
படுபிணந்தா வென்று பறித்தவள்கைக் கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றாங்
கிடுபிணந் தின்னு மிடாகினிப்பேய் வாங்கி
மடியகத் திட்டாள் மகவை யிடியுண்ட
மஞ்ஞைபோ லேங்கி யழுதாளுக் கச்சாத்தன்
அஞ்ஞைநீ யேங்கி யழலென்று முன்னை
உயிர்க்குழவி காணாயென் றக்குழவி யாயோர்
குயிற்பொதும்பர் நீழற் குறுக வயிர்ப்பின்றி
மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்துத்
தாய்கைக் கொடுத்தாளத் தையலா டுய
மறையோன்பின் மாணியாய் வான்பொருட் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்னர் யிறையோனும்
தாயத்தா ரோடும் வழக்குரைத்துத் தந்தைக்கும்

தாயர்க்கும் வேண்டுங் கடன்கழித்து மேயநாள்
தேவந்தி யென்பாள் மனைவி யவளுக்குப்
பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன்
மூவா விளநலங் காட்டியெங் கோட்டத்து
நீவா வெனவுரைத்து நீங்குதலுந் தூமொழி
ஆர்த்த கணவ னகன்றனன் போயெங்கும்
தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவா யெனவொன்றன் மேலிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர்க்
கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்
றெண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச் சென்று
பெறுக கணவனோ டென்றாள் பெறுகேன்
கடுக்குமென் னெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற் படாத தொரு வார்த்தை
இட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேல்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ
டூர்க்குற்ற தீங்குமொன் றுண்டால் உரையாடேன்
தீக்குற்றம் போலுஞ் செறிதொடீஇ தீக்குற்றம்
உற்றேனொ டுற்ற உறுவானோ டியானுற்ற
நற்றிறங் கேட்கி னகையாகும் பொற்றொடீஇ
கைத்தாயு மல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொரு
நாள்
ஆடுது மென்ற வணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெனவிருந்த பின்னரே நீடிய
காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநம்
கோவல னென்றாளோர் குற்றிளையாள் கோவலனும்

பாடமை சேக்கையுட் புக்குத்தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தங்கண் டியாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன
நலங்கேழ் முறுவ னகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனச் சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர் கோதா யெழுகென்று நீடி
வினைகடைக் கூட்டவியங் கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்.

வெண்பா

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க—மூதை
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்.

# பக்தி இலக்கியப் பாடல்கள்

## 5. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

'மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகள்' என்ற சிறப்புக்கு உரிய இந் நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தெளியாத மறை நிலங்களை யெல்லாம் தெளிவிக்கும் திராவிட வேதமாகும். திருமால்பால் ஈடுபாடு கொண்டு, பன்னிரு ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்கள் அனைத்தும் இடம்பெற்றுத் திகழ்வது இந்த நூல் ஆகும். இறை, உயிர், தடை, நெறி, பேறு ஆகிய ஐந்து தத்துவப் பொருள் களையும், இலக்கியத் தமிழில் உணர்த்துவன இந்தப் பாடல்கள்; பக்தி இலக்கியத்திற்குக் கருவூலமாய்த் திகழ்வதும் இதுவே.

இதனுள் இடம் பெற்றுள்ள பாடல்களுள் ஆண்டாள், குலசேகரர் ஆகிய ஆழ்வார் இருவரும் பாடியருளிய பாசுரங்களுள் முறையே விண்ணீல மேலாப்பு, ஊனேறு என்னும் இரு பதிகங்களே இங்கு இணைக்கப்பெற்றுள்ளன.

காதல் அன்பிற்குக் காட்டாக ஆண்டாள் பாடிய பதிகம் இங்கு எடுத்தாளப் பெற்றுள்ளது. பக்தி இலக்கியப் பாங்கினைக் குறித்துக் குலசேகரர் பதிகம் அமைந்துள்ளது. இவ்விரு பதிகங்களும் திருவேங்கடத்தானையே பாடற்பொருளாகக் கொண்டமைந்துள என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

# திருவேங்கடத் திருப்பதிகங்கள்

பகுதி—(அ)

## நாச்சியார் திருமொழி

### விண்ணீல மேலாப்பு (மேக விடு தூது)

1. விண்ணீல மேலாப்பு
விரித்தாற்போல் மேகங்காள்,
தெண்ணீர்பாய் வேங்கடத்தென்
திருமாலும் போந்தானே
கண்ணீர்கள் முலைக்குவட்டில்,
துளிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மை யீடழிக்கும்,
இதுதமக்கோர் பெருமையே.

2. மாமுத்த நிதிசொரியும்
மாமுகில்காள், வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட
தாடாளன் வார்த்தையென்னே,
காமத்தீ யுள்புகுந்து
கதுவப்பட்டு இடைக்கங்குல்,
ஏமத்தோர் தென்றலுக்கிங்
கிலக்காய்நா னிருப்பேனே.

3. ஒளிவண்ணம் வளைசிந்தை
உறக்கத்தோ டிவையெல்லாம்,
எளிமையா விட்டென்னை
ஈடழியப் போயினவால்,
குளிரருவி வேங்கடத்தென்
கோவிந்தன் குணம்பாடி,
அளியத்த மேகங்காள்!
ஆவிகாத் திருப்பேனே.

4. மின்கைத் தெழுகின்ற
மேகங்காள், வேங்கடத்துத்
தன்கைத் திருமங்கை
தங்கியசீர் மார்வற்கு,
என்கைத் திளங்கொங்கை
விரும்பித்தாம் நாடொறும்,
பொன்னுகம் புல்குதற்கென்
புரிவுடைமை செப்புமினே.

5. வான்கொண்டு கிளர்ந்தெழுந்த
மாமுகில்காள், வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத்
திரண்டேறிப் பொழிவீர்காள்,
ஊன்கொண்ட வள்ளுகிரால்
இரணியனை யுடலிடந்தான்,
தான்கொண்ட சரிவளைகள்
தருமாகில் சாற்றுமினே.

6. கலங்கொண்டு கிளர்ந்தெழுந்த
தண்முகில்காள், மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே
நிரந்தேறிப் பொழிவீர்காள்,
உலங்குண்ட விளங்கனிபோல்
உள்மெலியப் புகுந்து, என்னை
நலங்கொண்ட நாரணற்கென்
நடலைநோய் செப்புமினே.

7. சங்கமா கடல்கடைந்தான்
தண்முகில்காள், வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ்
அடிவீழ்ச்சி விண்ணப்பம்,
கொங்கைமேல் குங்குமத்தின்
குழம்பழியப் புகுந்து, ஒருநாள்
தங்குமே லென்னாவி
தங்குமென் றுரையீரே.

8. கார்காலத் தெழுகின்ற
கார்முகில்காள், வேங்கடத்துப்
போர்காலத் தெழுந்தருளிப்
பொருதவன் பேர்சொல்லி,
நீர்காலத் தெருக்கிலம்
பழஇலைபோல் வீழ்வேனை,
வார்காலத் தொருநாள்தம்
வாசகந்தந் தருளாரே.

9. மதயானை போலெழுந்த
மாமுகில்காள், வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்,
பாம்பணையான் வார்த்தை யென்னே.
கதியென்றும் தானாவான்
கருதாது, ஓர் பெண்கொடியை
வதைசெய்தான்! என்னும்சொல்
வையகத்தார் மதியாரே.

10. நாகத் தணையானை
நன்னுதலாள் நயந்துரைசெய்
மேகத்தை வேங்கடக் கோன்
விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத
புதுவையர்கோன் கோதைதமிழ்
ஆகத்து வைத்துரைப்பார்
அவரடியா ராகுவரே.

# திருவேங்கடத் திருப்பதிகங்கள்

## பகுதி—(ஆ)

## பெருமாள் திருமொழி

### ஊனேறு

1. ஊனேறு செல்வத் துடற்பிறவி யான் வேண்டேன்,
ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்,
கூனேறு சங்க மிடத்தான் தன் வேங்கடத்து,
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.

2. ஆனாத செல்வத் தரம்பயர்கள் தற்சூழ,
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்,
தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்,
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.

3. பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்திரனும்
துன்னிட்டப் புகலரிய வைகுந்த நீள்வாசல்,
மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்
பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவே னாவேனே.

4. ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்,
கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு,
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து,
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே.

5. கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து,
இன்பமரும் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்,
எம்பெருமா னீச னெழில்வேங் கடமலைமேல்,
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே.

6. மின்னனைய நுண்ணிடையா ருருப்பசியும் மேனகையும்,
அன்னவர்தம் பாடலொடு மாடலவை யாதரியேன்,
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்
அன்னனைய பொற்குவடா மருந்தவத்த னாவேனே.

7. வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ்
மன்னவர்தம்,
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்,
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்,
கானாறாய்ப் பாயும் கருத்துடையே னாவேனே.

8. பிறையேறு சடையானும் பிரமனு மிந்திரனும்,
முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான்
மறையானுன்,
வெறியார்தண் சோலைத் திருவேங் கடமலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே.

9. செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்,
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாக் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

10. உம்ப ருலகாண் டொருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலு மாதரியேன்,
செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே.

11. மன்னியதண் சாரல் வடவேங் கடத்தான்றன்,
பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி,
கொன்னவிலும் கூர்வேற் குலசே கரன்சொன்ன,
பன்னியநூல் தமிழ்வல்லார் பங்காய பத்தர்களே.

# இடைக்காலக் காப்பியங்கள்

## 6. இராமாயணம்

தமிழகத்தின் கல்வி மேம்பாட்டை நினையும்போது பாரதிக்கு கம்பர் நினைவே வருகிறது. 'கல்வி சிறந்த தமிழ்நாடு உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்கிறார் அவர். 'கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே' என்கிறார் இன்னொரு கலைஞர். 'என்ன கம்ப சித்திரமோ? என்ற உலக வழக்கு கம்பனின் கற்பனைத் திறத்திற்கு மக்கள் வழங்கிய சான்றிதழ்.

இராமகாதையில் பங்குபெற்ற கதை மாந்தர் எண்ணிலடங்கார். அவர்தம் தோற்றம், குணநலன் முதலியன தனித்தனிச் சிறப்பு வாய்ந்தன. இவ்வாறு நடை, உடை, பாவனைகளால் வேறுபட்ட மாந்தர்களைப் படைத்தளிப்பதன் மூலம் அழியாப் பெரும்புகழ் எய்தி மகா கவியாகத் திகழ்கிறார் கம்பர்.

அவர் படைத்த கதை மாந்தர்களுள் அங்கதன் வாலி புதல்வன் ஆவன். அவன் நெஞ்ச நினைவுகளைப் படம்பிடித்துக் காட்டுவது அங்கதன் தூதுப் படலம். இது இராமபிரானின் அரசியல் அறிவையும் அறவுணர்வையும் புலப்படுத்தவல்ல படலமாகும். இவ்வாறே கும்பகருணன் வதைப்படலமும் சிறந்தது. பாசத்தின் படிவமாய்த் திகழும் கும்பகருணனின் ஆற்றலையும், அன்பையும், அறிவையும், தெளிவையும் தெரிவிப்பது கும்பகருணன் வதைப்படல மாகும். அவை இரண்டும் இங்கு இடம் பெற்றுள்ளன.

## கும்பகருணன் வதைப்படலம்

### பகுதி—(அ)

### கும்ப கருணனை, 'இவன் யார்?' என, வீடணனிடம் இராமன் வினவல்

பாந்தளின் நெடுந் தலை வழுவி, பாரொடும்
வேந்து என விளங்கிய மேரு மால் வரை
போந்ததுபோல் பொலந் தேரில் பொங்கிய
ஏந்தலை, ஏந்து எழில் இராமன் நோக்கினான். 1

'வீணை என்று உணரின், அஃது அன்று; விண்தொடும்
சேண் உயர் கொடியது, வய வெஞ் சீயமால்;
காணினும் காலின் மேல் அரிய காட்சியன்;
பூண் ஒளிர் மார்பினன்; யாவன் போலுமால்? 2

தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்,
நாள் பல கழியுமால்; நடுவண் நின்றது ஓர்
தாளுடை மலை கொலாம்; சமரம் வேட்டது ஓர்
ஆள் என உணர்கிலேன்; ஆர்கொலாம் இவன்? 3

எழும் கதிரவன் ஒளி மறைய, எங்கணும்
விழுங்கியது இருள், இவன் மெய்யினால்; வெரீஇ,
புழுங்கும் நம் பெரும்படை இரியல் போகின்றது!
அழுங்கல் இல் சிந்தையாய்! ஆர்கொலாம் இவன்? 4

அரக்கன் அவ்உரு ஒழித்து, அரியின் சேனையை
வெருக் கொளத் தோன்றுவான், கொண்ட வேடமோ?
தெரிக்கிலேன் இவ்உரு; தெரியும் வண்ணம், நீ
பொருக்கென, வீடண! புகறியால்' என்றான். 5

### வீடணன், கும்பகருணனது தன்மையை எடுத்துரைத்தல்

ஆரியன் அனைய கூற, அடி இணை இறைஞ்சி, 'ஐய!
பேர் இயல் இலங்கை வேந்தன் பின்னவன்; எனக்கு முன்னோன்;
கார்இயல் காலன் அன்ன கழல் கும்பகருணன் என்னும்
கூரிய சூலத்தான்' என்று, அவன் நிலை கூறலுற்றான். 6

தவன் நுணங்கியரும் வேதத் தலைவரும் தன்மைச்
சிவன் உணர்ந்து, அலரின் மேலைத் திசைமுகன் உணரும் தேவன்
அவன் உணர்ந்து எழுந்த காலத்து, அசுரர்கள் படுவது எல்லாம்,
இவன் உணர்ந்து எழுந்தகாலத்து இமையவர் படுவர்; எந்தாய்! 7

'ஆழியாய்! இவன் ஆகுவான்,
ஏழை வாழ்வுடை எம்முனோன்
தாழ்வு இலா ஒரு தம்பியோன்;
ஊழி நாளும் உறங்குவான்; 8

காலனார் உயிர்க் காலனால்;
காலின் மேல்நிமிர் காலினான்;
மாலினார் கெட, வாகையே,
சூலமே கொடு, சூடினான்; 9

தாங்கு கொம்பு ஒரு நான்கு கால்
ஓங்கல் ஒன்றினை, உம்பர் கோன்
வீங்கு நெஞ்சன் விழுந்திலான்
தூங்க, நின்று சுழற்றினான்; 10

கழிந்த தீயொடு காலையும்
பிழிந்து சாறுகொள் பெற்றியான்;
அழிந்து மீன்உக, ஆழிநீர்
இழிந்து, காலினின் எற்றுவான்; 11

ஊன் உயர்ந்த உரத்தினான்,
மேல் நிமிர்ந்த மிடுக்கினான்;
தான் உயர்ந்த தவத்தினான்;
வான் உயர்ந்த வரத்தினான்; 12

திறம் கொள் சாரி திரிந்த நாள்,
கறங்கு அலாது கணக்கு இலான்;
இறங்கு தாரவன் இன்றுகாறு
உறங்கலால், உலகு உய்ந்ததால்; 13

சூலம் உண்டு; அது சூர் உளோர்
காலம் உண்டது; கைக் கொள்வான்;
ஆலம் உண்டவன் ஆழிவாய்,
ஞாலம் உண்டவ! நல்கினான்; 14

மின்னின் ஒன்றிய விண்ணுளோர்,
'முன் நில்' என்று, அமர் முற்றினார்
என்னில், என்றும் அவ் எண்ணிலார்
வென்னில் அன்றி விழித்திலான்; 15

"தருமம் அன்று இதுதான்; இதால்
வரும், நமக்கு உயிர் மாய்வு" எனா,
உருமின் வெய்யவனுக்கு உரை
இருமை மேலும் இயம்பினான்; 16

மறுத்த தம்முனை, வாய்மையால்
ஒறுத்தும், ஆவது உணர்த்தினான்;
வெறுத்தும், 'மாள்வது மெய்' எனா
இறுத்து, நின் எதிர் எய்தினான்; 17

"நன்று இது அன்று நமக்கு" எனா,
ஒன்று நீதி உணர்த்தினான்;
இன்று காலன் முன் எய்தினான்'
என்று சொல்லி, இறைஞ்சினான். 18

### சுக்கிரீவன் கும்பகருணனைச் சேர்த்துக்கொள்ளுதல் நன்று எனக் கூறுதல்

என்று அவன் உரைத்தலோடும், இரவி சேய், 'இவனை இன்று
கொன்று ஒரு பயனும் இல்லை; கூடுமேல், கூட்டிக்கொண்டு
நின்றது புரிதும்; மற்றுஇந் நிருதர்கோன் இடரும் நீங்கும்;
"நன்று" என நினைந்தேன்' என்றான்; நாதனும், 'நயன் இது' என்றான். 19

### கும்பகருணனை அழைத்துவர வீடணன் செல்லுதல்

'ஏகுதற்கு உரியார் யாரே?' என்றலும், இலங்கை வேந்தன்,
'ஆகின் மற்று அடியனே சென்று, அறிவினால், அவனை உள்ளம்
சேகுஅறத் தெருட்டி, ஈண்டுச் சேருமேல், சேர்ப்பென்' என்றான்.
மேகம் ஒப்பானும், 'நன்று, போக!' என்று விடையும் ஈந்தான். 20

தந்திரக் கடலை நீந்தி, தன் பெரும் படையைச் சார்ந்தான்;
வெந்திற லவனுக்கு, 'ஐய! வீடணன் விரைவில் உன்பால்
வந்தனன்' என்னச் சொன்னார்; வரம்புஇலா உவகை கூர்ந்து,
சிந்தையில் களிக்கின்றான் தன் செறிகழல் சென்னி சேர்ந்
தான். 21

### 'வந்தது தகுதி அன்று' என வீடணனுக்குக் கும்பகருணன் கூறுதல்

முந்தி வந்து இறைஞ்சினானை, முகந்து, உயிர் மூழ்கப் புல்லி,
'உய்ந்தனை, ஒருவன் போனாய்' என மனம் உவக்கின்றேன் தன்
சிந்தனை முழுதும் சிந்த, தெளிவு இலார் போல மீள
வந்தது என், தனியே?' என்றான், மழையின் நீர் வழங்கு
கண்ணான். 22

'அவயம் நீ பெற்றவாறும், அமரரும் பெறுதல் ஆற்றா,
உவய லோகத்தினுள்ள சிறப்பும், கேட்டு உவந்தேன், உள்ளம்;
கவிஞரின் அறிவு மிக்காய்! காலன் வாய்க் களிக்கின் றேம்பால்
நவை உற வந்தது ஏன் நீ? அமுது உண்பாய் நஞ்சு
உண்பாயோ? 23

''குலத்து இயல்பு அழிந்ததேனும், குமர! மற்று உன்னைக்
கொண்டே!
புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற்று'' என்னா,
வலத்து இயல் தோளை நோக்கி மகிழ்கின்றேன்; மன்ன! வாயை
உலத்தினை, திரியவந்தாய்; உளைகின்றது உள்ளம், அந்தோ! 24

அறப்பெருந் துணைவர், தம்மை அபயம் என்று அடைந்த
நின்னைத்
துறப்பது துணியார், தங்கள் ஆர்உயிர் துறந்த போதும்;
இறப்பு எனும் பதத்தை விட்டாய்; இராமன் என்பனவும் மற்றுஇப்
பிறப்பு எனும் புன்மை இல்லை; நினைந்து, என்கொல்
பெயர்ந்த வண்ணம்? 25

அறம் என நின்ற நம்பிக்கு அடிமை பெற்று, அவன் தனாலே
மறம் என நின்ற மூன்றும் மருங்கு அற மாற்றி, மற்றும்,
திறம் என நின்ற தீமை உம்மையே தீர்ந்த செல்வ!
பிறர் மனை நோக்குவேமை உறவு எனப் பெறுதி போலாம்? 26

'நீதியும், தருமம் நின்ற நிலைமையும், புலமைதானும்,
ஆதி அம் கடவுளாலே அருந் தவம் ஆற்றிப் பெற்றாய்;
வேதியர் தேவன் சொல்லால், விளிவு இலா ஆயுட்பெற்றாய்,
சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும்;—
தக்கோய்! 27

ஏற்றிய வில்லோன், யார்க்கும் இறையவன், இராமன் நின்றான்;
மாற்ற அருந் தம்பி நின்றான்; மற்றையோர் முற்றும் நின்றார்;
கூற்றமும் நின்றது, எம்மைக் கொல்லிய விதியும் நின்ற;
தோற்ற எம் பக்கல், ஐய! வெவ்வலி தொலைய வந்தாய். 28

ஐய! நீ அயோத்தி வேந்தற்கு அடைக்கலம் ஆகி, ஆங்கே
உய்கிலை என்னின், மற்றுஇவ் அரக்கராய் உள்ளோர் எல்லாம்
எய் கணை மாரியாலே இறந்து, பாழ் முழுதும் பட்டால்,
கையினால் எள்நீர் நல்கி, கடன் கழிப்பாரைக் காட்டாய். 29

'வருவதும், இலங்கை மூதூர்ப் புலை எலாம் மாண்ட பின்னை,
திருவுறை மார்பனோடும் புகுந்து, பின் என்றும் தீராப்
பொருவ அருஞ்செல்வம் துய்க்கப் போதுதி, விரைவின்' என்றன்
'கருமம் உண்டுஉரைப்பது' என்றான்; உரை என, கழறலுற்றான்.
30

இராமனைச் சரண்புகுமாறு
வீடணன் கும்பகருணனுக்கு அறிவுறுத்தல்

இருள் உறு சிந்தை யேற்கும் இன்அருள் சுரந்த வீரன்
அருளும், நீ சேரின்; ஒன்றோ, அவயமும் அளிக்கும்; அன்றி,
மருள்உறு பிறவி நோய்க்கு மருந்தும் ஆம்; மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை ஒழித்து, வீடு அளிக்கும் அன்றே. 31

'எனக்கு அவன் தந்த செல்வத்து இலங்கையும் அரசும் எல்லாம்
நினக்கு நான் தருவென்; தந்து, உன் ஏவலின் நெடிது நிற்பென்,
உனக்கு இதின் உறுதி இல்லை; உத்தம! உன் பின் வந்தேன்
மனக்கு நோய் துடைத்து, வந்த மரபையும் விளக்கு வாழி! 32

'போதலோ அரிது; போனால், புகலிடம் இல்லை; வல்லே,
சாதலோ சரதம்; நீதி அறத்தொடும் தழுவி நின்றாய்
ஆதலால், உளதாம் ஆவி அநாயமே உகுத்து என்? ஐயா!
வேத நூல் மரபுக்கு ஏற்ற ஒழுக்கமே பிடிக்க வேண்டும். 33

தீயவை செய்வர் ஆகின், சிறந்தவர், பிறந்த உற்றார்,
தாய்அவை, தந்தைமார் என்று உணர்வரோ, தருமம் பார்ப்பார்?
நீ அவை அறிதி அன்றே; நினக்கு நான் உரைப்பது என்னோ?
தூயவை துணிந்த போது, பழி வந்து தொடர்வது உண்டோ? 34

'மக்களை, குரவர்தம்மை, மாதரை, மற்றுளோரை,
ஒக்கும் இன்உயிர் அன்னாரை, உதவி செய்தாரோடு ஒன்றை,
''துயரம் இத்தொடர்ச்சி'' என்று, துறப்பரால், துணிவு
பூண்டோர்;
மிக்கது நலனே ஆக, வீடுபேறு அளிக்கும் அன்றே! 35

தீவினை ஒருவன் செய்ய, அவனொடும் தீங்கு இலாதோர்
வீவினை உறுதல், ஐய! மேன்மையோ? கீழ்மை தானோ?
ஆய்வினை உடையை அன்றே? அறத்தினை நோக்கி, ஈன்ற
தாய்வினை செய்ய அன்றோ, கொன்றனன், தவத்தின்
மிக்கான்? 36

'கண்ணுதல், தீமைசெய்ய, கமலத்து முளைத்த தாதை
அண்ணல்தன் தலையின் ஒன்றை அறுக்க அன்று அமைந்தான்
அன்றே?
புண் உறு புலவு வேலோய்! பழியொடும் பொருந்தி, பின்னை,
எண்ணுறு நரகின் வீழ்வது அறிஞரும் இயற்று வாரோ? 37

'உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்து, அதன் உதிரம்
ஊற்றி,
சுடல் உறச் சுட்டு, வேறு ஓர் மருந்தினால், துயரம் தீர்வர்;
கடலிடைக் கோட்டம் தேய்த்துக் கழிவது கருமம் அன்றால்,
மடலுடை அலங்கல் மார்ப! மதி உடையவர்க்கு மன்னோ! 38

காக்கலாம் நும்முன் தன்னை எனின், அது கண்டது இல்லை;
ஆக்கலாம் அறத்தை வேறே எனினும், அஃது ஆவது இல்லை;
தீக்கலாம் கொண்ட தேவர் சிரிக்கலாம்; செருவில் ஆவி
போக்கலாம்; புகலாம் பின்னை நரகு, அன்றிப் பொருந்திற்று
உண்டோ? 39

'மறம் கிளர் செருவில் வென்று வாழ்ந்திலை; மண்ணின் மேலா
இறங்கினை; இன்றுகாறும் இளமையும் வறிதே ஏக,
உறங்கினை என்பது அல்லால், உற்றது ஒன்று உளதோ? என், நீ
அறம்கெட உயிரை நீத்து மேற்கொள்வான் அமைந்தது—ஐயா! 40

திரு மறு மார்பன் நல்க, அனந்தரும் தீர்ந்து, செல்வப்
பெருமையும் எய்தி, வாழ்தி; ஈறு இலா நாளும் பெற்றாய்;
ஒருமையே அரசு செய்வாய்; உரிமையே உனதே; ஒன்றும்
அருமையும் இவற்றின் இல்லை; காலமும் அடுத்தது, ஐயா! 41

தேவரிக்கும் தேவன் நல்க, இலங்கையில் செல்வம் பெற்றால்,
ஏவர்க்கும் சிறியை அல்லை; யார், உனை நலியும் ஈட்டார்?—
மூவர்க்கும் தலைவர் ஆன மூர்த்தியார், அறத்தை முற்றும்
காவிற்குப் புகுந்து நின்றார், காகுத்த வேடம் காட்டி! 42

உன் மக்கள் ஆகி உள்ளார், உன்னொடும் ஒருங்கு தோன்றும்
என் மக்கள் ஆகி உள்ளார், இக் குடிக்கு இறுதி சூழ்ந்தான்—
தன் மக்கள் ஆகி உள்ளார், தலையொடும் திரிவர் அன்றே—
புன் மக்கள் தருமம் பூணாப் புலமக்கள் தருமம் பூண்டால்? 43

முனிவரும் கருணை வைப்பர்; மூன்று உலகத்தும் தோன்றி
இனிவரும் பகையும் இல்லை; ''ஈறு உண்டு'' என்று இரங்க
வேண்டா
துனிவரும் செறுநர் ஆன தேவரே துணைவர் ஆவர்;
கனிவரும் காலத்து, ஐய! பூக் கொய்யக் கருதலாமோ? 44

வேத நாயகனே உன்னைக் கருணையால் வேண்டி, விட்டான்
காதலால் என்மேல் வைத்த கருணையால், கருமம் ஈதே;
ஆதலால் அவனைக் கர்ண, அறத்தொடும் திறம்பாது, ஐய!
போதுவாய் நீயே' என்னப் பொன் அடி இரண்டும் பூண்டான். 45

கும்பகருணன் மறுத்து உரைத்தல்

தும்பிஅம் தொடையல் மாலைச் சுடர் முடி படியில் தோய
பம்பு பொற் கழல்கள் கையால் பற்றினன் புலம்பும் பொன்தோள்
தம்பியை எடுத்து, மார்பில் தழுவி, தன் தறுகணூடு
வெம்புனீர் சொரிய நின்றான் இனையன விளம்பலுற்றான். 46

நீர்க் கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க் கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது, அங்குப்
போகேன்;
தார்க் கோல மேனி மைந்த! என் துயர் தவிர்த்தி ஆகின்,
கார்க் கோல மேனியானைக் கூடுதி, கடுதி ஏகி. 47

மலரின்மேல் இருந்த வள்ளல் வழுஇலா வரத்தினால், நீ
உலைவு இலாத் தருமம் பூண்டாய்; உலந உளதனையும்
உள்ளாய்;
தலைவன் நீ, உலகுக்கு எல்லாம்; உனக்கு அது தக்கதேயால்;
புலை உறு மரணம் எய்தல் எனக்கு இது புகழதேயால். 48

கருத்து இலா இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்துதி
திருத்தலாம் ஆகின் அன்றோ திருத்தலாம்? தீராது ஆயின்,
பொருத்து உறு பொருள் உண்டாமோ? பொரு தொழிற்கு உரியர்
ஆகி,
ஒருத்தரின் முன்னம் சாதல், உண்டவர்க்கு உரியது அம்மா. 49

தும்பி அம் தொடையல் வீரன் சுடு கணை துரப்ப, சுற்றும்
வெம்பு வெஞ் சேனை யோடும், வேறு உள இளைஞரோடும்,
உம்பரும் பிறரும் போற்ற, ஒருவன் மூவுலகை ஆண்டு,
தம்பியை இன்றி மாண்டு கிடப்பனோ, தமையன் மண்மேல்? 50

அணை இன்றி உயர்ந்த வென்றி அஞ்சினார் நகையது ஆக,
பிணை ஒன்று கண்ணாள் பங்கன் பெருங்கிரி நெருங்கப் பேர்த்த
பணை ஒன்று திரள்தோள் கால பாசத்தால் பிணிப்ப, கூசி,
துணை இன்றிச் சேரல் நன்றோ, தோற்றுள கூற்றின் சூழல்? 51

செம்பு இட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி,
வம்பு இட்ட தெரியல் எம்முன் உயிர்கொண்ட பகையை
வாழ்த்தி,
அம்பு இட்டுத் துன்னம் கொண்ட புண்ணுடை நெஞ்சோடு, ஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையும் ஆடல் கொண்
டேன்! 52

அனுமனை, வாலி சேயை, அருக்கன் சேய் தன்னை, அம்பொன்
தனு உடையவரை, வேறுஓர் நீலனை, சாம்பன் தன்னை,
கனி தொடர் குரங்கின் சேனைக் கடலையும் கடந்து, மூடும்,
பனிதுடைத்து உலகம் சுற்றும் பரிதியின் திரிவென்; பார்த்தி! 53

ஆலம் கண்டு அஞ்சி அமரர் போல் அரிகள் ஓட,
சூலம் கொண்டு ஓடி, வேலை தொடர்வது ஓர் தோற்றம் தோன்ற,
நீலம் கொள் கடலும் ஓட, நெருப்போடு காலும் ஓட,
காலம் கொள் உலகும் ஓட, கறங்கு எனத் திரிவென்; காண்டி! 54

செருவிடை அஞ்சார் வந்து, என் கண்எதிர் சேர்வர் ஆகின்,
கரு வரை, கனகக் குன்றம், என்னல் ஆம் காட்சி தந்த
இருவரும் நிற்க, மற்று அங்கு யார் உளர், அவரை எல்லாம்
ஒருவரும் திரிய ஒட்டேன், உயிர் சுமந்து உலகில் என்றான். 55

தாழ்க்கிற்பாய் அல்லை; என் சொல் தலைக்கொளத் தக்கது என்று
கேட்கிற்பாய் ஆகின் எய்தி, அவரொடும் கெழீஇய நட்பை
வேட்கிற்பாய்; "இனி, ஓர் மாற்றம் விளம்பினால் விளைவு உண்டு" என்று
சூழ்க்கிற்பாய் அல்லை; யாரும் தொழ நிற்பாய்!' என்னச் சொன்னான். 56

போதி நீ, ஐய! பின்னைப் பொன்றினார்க்கு எல்லாம் நின்ற
வேதியர் தேவன் தன்னை வேண்டினைப் பெற்று, மெய்ம்மை
ஆதிநூல் மரபினாலே, கடன்களும் ஆற்றி, ஏற்றி,
மாதுயர் நரகம் நண்ணா வண்ணமும் காத்தி மன்னோ. 57

'ஆகுவது ஆகும் காலத்து; அழிவதும், அழிந்து சிந்திப்
போகுவது; அயலே நின்று போற்றினும், போதல் திண்ணம்;
சேகு அறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்? வருத்தம் செய்யாது,
ஏகுதி; எம்மை நோக்கி இரங்கலை; என்றும் உள்ளாய்!' 58

வீடணன் விடை பெறுதல்

என்று, அவன் தன்னை மீட்டும் எடுத்து, மார்பு இறுகப் புல்லி,
நின்று நின்று, இரங்கி ஏங்கி, நிறை கணால் நெடிது நோக்கி,
இன்றொடும் தவிர்ந்தது அன்றே, உடன்பிறப்பு என்று விட்டான்;
வென்றி வெந் திறலினானும், அவன் அடித்தலத்து வீழ்ந்தான். 59

வணங்கினான்; வணங்கி, கண்ணும் வதனமும் மனமும் வாயும்
உணங்கினான்; உயிரோடு யாக்கை ஒடுங்கினான்; உரைசெய்து இன்னும்
பிணங்கினால் ஆவது இல்லை; பெயர்வது என்று உணர்ந்து போந்தான்;
குணங்களால் உயர்ந்தான் சேனைக் கடல் எலாம் கரங்கள் கூப்ப. 60

### வீடணன் செல்லுதல் கண்டு கும்பகருணன் கண்ணீருங் கம்பலையுமாய் நிற்றல்

கள்ள நீர் வாழ்க்கை யேமைக் கைவிட்டு, காலும் விட்டான்;
பிள்ளைமை துறந்தான் என்னாப் பேதுறும் நிலையன் ஆகி,
வெள்ள நீர் வேலை தன்னில் வீழ்ந்த நீர் வீழ, வெங்கண்
உள்ள நீர் எல்லாம் மாறி, உதிர நீர்ஒழுக, நின்றான். 61

## பகுதி (ஆ)

### அங்கதன் தூதுப்படலம்

வள்ளலும் விரைவில் எய்தி வடதிசை வாயின் முற்றி
வெள்ளமோர் ஏழு பத்துக் கணித்தவெஞ் சேனை யோடும்
கள்ளனை வரவு நோக்கி நின்றனன் காண்கி லாதான்
ஒள்ளிய துணர்ந்தேன் என்ன வீடணற் குரைப்ப தானான். 1

தூதுவன் ஒருவன் தன்னை யிவ்வழி விரைவில் தூண்டி
மாதினை விடுதி யோஎன் றுணர்த்தவே மறுக்கு மாகில்
காதுதல் கடனென் றுள்ளம் கருதிய தறனும் அஃதே
நீதியும் அஃதே என்றான் கருணையின் நிலைய மன்னான். 2

அரக்கர் கோன் அதனைக் கேட்டான் அழகிற்றே யாகு மென்றான்
குரங்கினத் திறைவன் கேட்டுக் கொற்றவர்க் குற்ற தென்றான்
இரக்கம திழுக்க மென்றுன் இளையவன் இனி நா மம்பு
துரக்குவ தல்லால் வேறொர் சொல்லுண்டோ வென்னச் சொன்னான். 3

தேசருக் கிடுக்கண் செய்தான் தேவியைச் சிறையில் வைத்தான்
பூசுரர்க் கலக்கண் ஈந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லா உலகமும் தானே ஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான் வழியலா வழிமேற் செல்வான் 4

வாழியாய் நின்னை அன்று வரம்பறு துயரின் வைகச்
சூழ்விலா மாயம் செய்துன் தேவியைப் பிரிவு செய்தான்
ஏழையாள் இரக்க நோக்கி ஒருதனி இகன்மேற் சென்ற
ஊழிகாண் கிற்கும் வாணாள் உந்தையை உயிர்பண் டுண்டான். 5

அன்னவன் தனக்கு மாதை விடிலுயிர் அருளு வாயேல்
என்னுடை நாம நிற்கும் அளவெலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே என்று வந்தடைந் தவற்கு வாயால்
சொன்ன சொல் என்னாம் முன்னம் சூளுற வென்னாம்
தோன்றால். 6

அறந்தரு தவத்தை ஆயும் அறிவினால் அவற்றை முற்றும்
மறந்தனை எனினும் மற்றிவ் விலங்கையின் வளமை நோக்கி
இறந்திது போதல் தீதென் றிரங்கினை எனினும் எண்ணிற்
சிறந்தது போரே என்றான்; சேவகன் முறுவல் செய்தான். 7

அயர்த்திலன் முடிவும் அஃதே ஆகினும் அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாந்துறந் தமைதல் நன்றோ
புயத்துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்தல்
சயத்துறை அறனு மஃதே என்றிவை சமயச் சொன்னான். 8

மாருதி பின்னுஞ் செல்லின் மற்றிவன் அன்று வந்து
சாருநர் வலியோ ரில்லை என்பது சாரும் அன்றே
யாரினி ஏகத் தக்கார் அங்கதன் அமையும் ஒன்னார்
வீரமே விளைப்ப ரேனும் தீதின்றி மீள வல்லான். 9

நன்றென அவன் றனைக்கூய் நம்பி நீ நண்ண லார்பாற்
சென்றுள துணர ஒன்று செப்பினை திரிதி என்றான்
அன்றவன் அருளப்பெற்ற ஆண்டகை அலங்கற் பொற்றோள்
குன்றினும் உயர்ந்த தென்றால் மனநிலை கூற லாமோ. 10

என்னவற் குறைப்ப தென்ன ஏந்திழை யாளை விட்டுத்
தன்னுயிர் பெறுகை நன்றோ வன்றெனிற் தலைகள் பத்துஞ்
சின்னபின் னங்கள் செய்யச் செருக்களம் சேர்தல் நன்றோ
சொன்னவை இரண்டில் ஒன்றே துணிகெனச் சொல்லி
டென்றான். 11

அறத்துறை யன்று வீரர்க் கழகுமன் றாண்மை யன்று
மறத்துறை யன்று சேம மறைந்துறைந் தொதுங்கி வாழ்தல்
நிறத்துற வாளி கோத்து நேர்வந்து நிற்கு மாகிற்
புறத்துற வெதிரே வந்து போர்தரப் புகறி என்றான். 12

பலர்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வ தென்ன
வீரன் வெஞ் சிலையிற் கோத்த அம்பென விசையிற் போனான்
மாருதி அல்ல னாகில் நீயெனும் மாற்றம் பெற்றேன்
யாரினி என்னோ டொப்பார் என்பதோர் இன்பம் உற்றான். 13

அயில் கடந் தெரிய நோக்கும் அரக்கரைக் கடக்க ஆழித்
துயில் கடந் தயோத்தி வந்தான் சொற்கட வாத தூதன்
வெயில்கடந் திலாத காவல் மேருவின் மேலு நீண்ட
எயில்கடந் திலங்கை எய்தி அரக்கன திருக்கை புக்கான். 14

அழுகின்ற கண்ணராகி அனுமன் கொ லென்ன வஞ்சித்
தொழுகின்ற சுற்றஞ் சுற்றச் சொல்லிய துறைகள் தோறும்
மொழிகின்ற வீரர் வார்த்தை முகந்தொறுஞ் செவியின் மூழ்க
எழுகின்ற சேனை நோக்கி இயைந்திருந் தானைக் கண்டான். 15

கல்லுண்டு மரமுண் டேழைக் கடலொன்றுங் கடந்தே மென்னுஞ்
சொல்லுண்டே யிவனை வெல்லத் தோற்றத்தோர் கூற்ற
முண்டோ
எல்லுண்ட படைகைக் கொண்டால் எதிருண்டோ இராமன்
கையில்
வில்லுண்டேல் உண்டென் றெண்ணி ஆற்றலை வியந்து
நின்றான். 16

இன்றிவன் தன்மை எய்த நோக்கினால் எதிர்ந்த போரில்
வென்றஎன் தாதை மார்பின் வில்லின்மேற் கணையொன்
றேவிக்
கொன்றவன் தானே வந்தான் என்று தான் குறிப்பின் அல்லால்
ஒன்றிவன் தன்னைச் செய்ய வல்லரோ உயிர்க்கு நல்லார். 17

அணிபறித் தழகு செய்யும் அணங்கின்மேல் வைத்த காதற்
பிணிபறித் திவனை யாவர் முடிப்பவர் படிக்கட் பேழ்வாய்ப்
பணிபறித் தெழுந்த மானக் கலுழனி னிவனைப் பற்றி
மணிபறித் தெழுந்த எந்தை யாரினும் வலியன் என்றான். 18

நெடுந்தகை விடுத்த தூதன் இனையன நிரம்ப எண்ணிக்
கடுங்கனல் விடமும் கூற்றும் கலந்துகால் கரமும் காட்டி
விடுஞ்சுடர் மகுடம் பின்ன விரிகடல் இருந்த தென்னக்
கொடுந்தொழில் மடங்கல் அன்னா னெதிர் சென்று குறுகி
நின்றான். 19

நின்றவன் தன்னை அன்னான் நெருப்பேழ நிமிரப் பார்த்திங்
கின்றிவண் வந்த நீயார் எய்திய கருமம் ஏது
கொன்றிவர் தின்னா முன்னங் கூறுதி தெரிய வென்றான்
துன்றிறல் வாலி சேயும் வாளெயி றிலங்க நக்கான். 20

பூதநா யகன் நீர் சூழ்ந்த புவிக்குநா யகன்இப் பூமேற்
சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகன்நீ செப்பும்
வேதநா யகன்மே னின்ற விதிக்குநா யகன் தான் விட்ட
தூதன்யான் பணித்த மாற்றஞ் சொல்லிய வந்தேன் என்றான். 21

அரன்கொலாம்அரிகொ லாம்மற் றயன்கொலாம் என்பா
ரன்றிக்
குரங்கெலாங் கூட்டி வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங் குவா னாகில் இன்னம் அறிதியென் றுன்னை ஏவும்
நரன்கொலாம் உலகநாதன் என்றுகொண்ட ரக்கன் நக்கான். 22

கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல் கரத்து நேமி
சங்கமும் தரித்த மால் மற் றின்னகர் தன்னைச் சாரார்
அங்கவர் நிலைமை நிற்க மனிதனுக் காக வஞ்சா
திங்குவந் திதனைச் சொன்ன தூதனீ யாவன் என்றான். 23

இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்கின் றானைச்
சுந்தரத் தோள்க ளோடு வாலிடைத் தூங்கச் சுற்றி
சிந்துரக் கிரிக டாவித் திரிந்தனன் தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினுன் மைந்தன் என்றான். 24

உந்தை என் துணைவன் அன்றே ஒங்குநற் சான்றும் உண்டால்
நிந்தனை பிதன்மே லுண்டோ நீயவன் தூதனாதல்
தந்தனன் நினக்கு யானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தாய் என்னுடை மைந்த வென்றான். 25

தாதையைக் கொன்றான் பின்னே தலை சுமந்திருகை நாற்றிப்
பேதையன் என்ன வாழ்ந்தான் என்பதோர் பிழையும் தீர்ப்பாய்;
சீதையைப் பெற்றேன் உன்னைச் சிறுவனு மாகப் பெற்றேன்
ஏதெனக் கரிய தென்றான் இறுதியின் எல்லைகண்டான். 26

அந்நர ரின்று நாளை அழிவதற் கைய மில்லை
உன்னர சுனக்கே தந்தேன் ஆளுதி ஊழிக்காலம்
பொன்னரி சுமந்த பீடத் திமையவர் போற்றி செய்ய
மன்னவ னாக யானே சூட்டுவன் மகுடம் என்றான். 27

அங்கதன் அதனைக் கேளா அங்கையோ டங்கை தாக்கித்
துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்
இங்குநின் றார்கட் கெல்லாம் இறுதியே என்ப துன்னி
உங்கள்பால் நின்றும் எம்பாற் போந்தனன் உம்பி என்றான். 28

வாய்தரத் தக்க சொல்லி என்னையுன் வசம்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ தூதுவந் தரச தாள்கை
நீ தரக் கொள்வேன் யானே யிதற்கினி நிகர்வே றெண்ணில்
நாய்தரக் கொள்ளுஞ் சீயம் நல்லர சென்று நக்கான். 29

அடுவனே என்னப் பொங்கி ஓங்கிய வரக்கன் அந்தோ
தொடுவனே குரங்கைச் சீறிச் சுடர்படை யென்று தோன்றா
நடுவனே செய்யத் தக்க நாளுலந் தாரை நம்பிப்
படுவதே துணிந்தா யாகில் வந்தது பகர்தி என்றான். 30

கூவியின் றென்னை நீ போய்த் தன்குல முழுதுங் கொல்லும்
பாவியை அமருக் கஞ்சி அரண்புக்குப் பதுங்கி னானைத்
தேவியை விடுக அன்றேல் செருக்களத் தெதிர்ந்து தன்னின்
ஆவியை விடுக என்றான் அருளினம் விடுகி லாதான். 31

பருந்துணப் பாட்டி யாக்கை படுத்தநாட் படைஞ ரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை எழில் நிறை யாக்கை எம்பி
அரிந்த நாள் வந்தி லாதான் இனிச் செய்யும் ஆண்மை
உண்டோ. 32

கிளை யொடும் படைஞரோடுங் கேடிலா உயிர்கட் கெல்லாம்
களை யெனத் தம்பிமாரை வேரொடுங் களையக் கண்டும்
இளையவன் பிரிய மாயம் இயற்றியா யிழையை வெளவும்
வளையெயிற் றரக்கன் வெம்போர்க் கினியெதிர் வருவதுண்டோ. 33

ஏந்திழை தன்னைக் கண்ணுற் றெதிர்ந்தவர் தம்மை எற்றிச்
சாந்தெனப் புதல்வன் தன்னைத் தரையிடைத் தேய்த்துத் தன்னூர்
காந்தெரி மடுத்துத் தானும் காணவே கடலைத் தாவிப்
போந்தபின் வந்திலாதான் இனிப்பொரும் போரும் உண்டோ? 34

உடைக்குலத் தொற்றர் தம்பால் உயிர்கொடுத் துள்ளக் கள்ளம்
துடைத்துழி வருணன் வந்து தொழுதுழித் தொழாத கொற்றக்
குடைத்தொழில் உம்பி கொள்ளக் கொடுத்துழி வேலை கோலி
துடைத்துழி வந்தி லாதான் இனிவர ஐய முண்டோ. 35

மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளின் வைகும்
நெறிப்புண்ட ரீகம் அன்ன முகத்தியர் முன்னே நென்னல்
பொறிப்புண்ட ரீகம் போலும் ஒருவனாற் புனைந்த மெளலி
பறிப்புண்டும் வந்தி லாதான் இனிப்பொரும் பான்மை உண்டோ. 36

என்றிவை இயம்பி வாவென் றேவின னென்னை எண்ணி
ஒன்றுனக் குறுவ துன்னித் துணிந்துரை யுறுதி பார்க்கின்
துன்றிடுங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத்தோடும்
பொன்றுதி யாகில் என்பின் வாயிலிற் புறப்ப டென்றான். 37

நீரிலே பட்ட ஆழ்ந்த நெருப்பிலே பட்ட நீண்ட
பாரிலே பட்ட வானப் பரப்பிலே பட்ட வெல்லாம்
போரிலே பட்டு வீழப் பொருதநீ ஒளித்துப் புக்குன்
ஊரிலே பட்டா யென்றாற் பழியென உளையச் சொன்னான். 38

(வேறு)

சொற்ற வார்த்தையைக் கேட்டலுந் தொல்லுயிர்
முற்றும் உண்பது போலும் முனிவினான்
பற்று மின்கடி தில்நெடும் பார்மிசை
எற்று மின்னென் நால்வரை ஏவினான். 39

ஏவி னான்பிடித் தாரை எடுத் தெழத்
தாவி னான் அவர் தந்தலை போயறக்
கூவி னான் அவன் கோபுர வாயிலில்
தூவி னான் துகைத்தான் இவை சொல்லினான். 40

ஏமஞ் சாரா வெளியவர் யாவிரும்
தூமங் கால்வன வீரன் சுடுசரம்
வேமின் போல்வன வீழ்வதன் முன்னமே
போமின் போமின் புறத்தென்று போயினான். 41

அந்த ரத்திடை யார்த்தெழுந் தானவன்
சிந்து ரத்தந் துதைந்தெழுஞ் செச்சையான்
இந்து விண்ணின் றிழிந்துள தாமென
வந்து வீரன் அடியில் வணங்கி ஞன். 42

உற்ற போதவன் உள்ளக் கருத் தெலாம்
கொற்ற வீரன் உணர்கென்று கூறலும்
முற்ற வோதி யென் மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி ஆசையறா னென்றான். 43

# 7. பெரியபுராணம்

" கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கிய''

திருத்தொண்டர்தம் தெய்வவாழ்வினை இலக்கியஞ் செய்துள்ளார் சேக்கிழார் பெருமான். அதுவே பெரியபுராணம் எனப் பெயர் பெற்று விளங்குகிறது. இதன் சிறப்புகள் பல.

இப் புராணத்தில் இடம்பெறும் திருத்தொண்டர் அறுபத்து மூவரும் பல சாதியினர். அவர்களுள் அந்தணரும் உளர், மீனவரும் உளர்; கொல்லா நெறியினரும் உளர், புலால் உண்பவரும் உண்டு; இல்லறத்தார்களும் உண்டு; ஓரிரு துறவிகளும் உளர். நம்மைப் போன்றே மனைவி மக்களோடு உண்டு உடுத்து வாழ்ந்தவர்களே அவர்களும். என்றாலும், தத்தமக்கெனத் தெய்வநெறி ஒன்றினை வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் விடாது பற்றி நின்றனர். எட்டு நூற்றாண்டுக்குமுன் இந்தத் தமிழ் மண்ணில் தோன்றி வாழ்ந்த அந்த அறுபத்துமூன்று நாயன்மார்தம் வாழ்வினை அறியின், அக்காலச் சமுதாய, சமய, அரசியல் வரலாற்றினை அறிந்தவ ராவோம்.

இத்தகு சிறப்புப்பல பொருந்திய பெரியபுராணத்தில், அன்பின் வழியே ஆண்டவனை அடைவதற்கு உரிய அருள்நெறி என்று உலகு அறியக் காரணமாய் அமைந்த கண்ணப்ப நாயனார் புராம், இணந்த நூலில் இடம்பெற்று விளங்குகிறது.

# கண்ணப்ப நாயனார் புராணம்

## நாடு

மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேதவாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்பர்
நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு. 1

## ஊர்

இத்திரு நாடு தன்னி லிவர்திருப் பதியா தென்னில்
நித்தில வருவிச் சார னீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்றொடர் வேலிகோலி
ஒத்தபே ரரணஞ் சூழ்ந்த முதுபதி யுடுப்பூ ராகும். 2

குன்றவ ரதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியு மெண்குங் கடமையு மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றி லைவன முணங்கு மெங்கும். 3

வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னோடும்
புன்றலைச் சிறும கார்கள் புரிந்துட னாடலன்றி
அன்புறு காதல்கூர வணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி யாடு மெயிற்றியர் மகளி ரெங்கும். 4

வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டந்தோறுங்
கொல்லெறி குத்தென் றார்த்துக் குழுமிய வோசை யன்றிச்
சில்லரித் துடியுங் கொம்புஞ் சிறுகணா குளியுங் கூடிக்
கல்லெனு மொலியின் மேலுங் கறங்கிசை யருவி யெங்கும். 5

ஆறலைத் துண்ணும் வேட ரயற்புலங் கவர்ந்துகொண்ட
வேறுபல் லுருவின் மிக்கு விரவுமா னிரைக ளின்றி
ஏறுடை வானந் தன்னி லிடிக்குர லெழிலி யோடு
மாறுகொண் முழக்கங் காட்டு மதக்கைமா நிரைக ளெங்கும். 6

## அதிபதி நாகன்

மைச்செறிந் தனைய மேனி வன்றொழின் மறவர் தம்பால்
அச்சமு மருளுமென்று மடைவிலா ருடைவன் றோலார்
பொச்சையி னறவுமுனின் புழுக்கலு முணவு கொள்ளும்
நச்சழற் பகழி வேடர்க் கதிபதி நாக னென்பான். 7

பெற்றியாற் றவமுன் செய்தா னாயினும் பிறப்பின் சார்பாற்
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலைநின் றுள்ளான்
விற்றொழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியுந் தத்தை யென்பாள். 8

அரும்பெறன் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தாள்
இரும்புலி யெயிற்றுத் தாலி யிடையிடை மனவு கோத்துப்
பெரும்புற மலையப் பூண்டாள் பீலியுங் குழையுந் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச் சூரரிப் பிணவு போல்வாள். 9

பொருவருஞ் சிறப்பின் மிக்கா ரிவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவருங் கூற வதற்படு காத லாலே
முருகல ரலங்கற் செவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கட னெறியி னிற்பார். 10

வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிக டுக்கிச் சுரும்பணி கதம்ப நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து பெருவிழா வெடுத்த பின்றை. 11

## மகப்பேறு

பயில்வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியா நாகற்
கெயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கொற்ற வூர்தி வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி யண்ணலா ரருளி னாலே. 12

கானவர் குலம்வி ளங்கத் தத்தைபாற் கருப்ப நீட
ஊனமில் பலிகள் போக்கி யுறுகடன் வெறியாட் டோடும்
ஆனவத் திங்கள் செல்ல வளவில்செய் தவத்தி னாலே
பான்மதி யுவரி யீன்றா லெனமகப் பயந்த போது. 13

கரிப்பரு மருப்பின் முத்துங் கழைவிளை செழுநீர் முத்தும்
பொருப்பினின் மணியும் வேடர் பொழிதரு மழையே யன்றி
வரிச்சுரும் பலைய வானின் மலர்மழை பொழிந்த தெங்கும்
அரிக்குறுந் துடியே யன்றி யமரர்துந் துபியு மார்த்த. 14

அருவரைக் குறவர் தங்க ளகன்குடிச் சீறூ ராயம்
பெருவிழா வெடுத்து மிக்க பெருங்களி கூருங் காலைக்
கருவரை காளமேக மேந்திய தென்னத் தாதை
பொருவரைத் தோள்க ளாரப் புதல்வனை யெடுத்துக் கொண்
டான். 15

கருங்கதிர் விரிக்கு மேனிக் காமரு குழவி தானும்
இரும்புலிப் பறழி னோங்கி யிறவுள ரளவே யன்றி
அரும்பெற லுலக மெல்லா மளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவும் சாற்றுந் தன்மையிற் பொலிந்து தோன்ற. 16

அண்ணலைக் கையி லேந்தற் கருமையா லுரிமைப் பேருந்
திண்ணனென் றியம்பு மென்னத் திண்சிலை வேட ரார்த்தார்
புண்ணியப் பொருளா யுள்ள பொருவில்சீ ருருவி னானைக்
கண்ணினுக் கணியாத் தங்கள் கலன்பல வணிந்தா ரன்றே. 17

வரையுறை கடவுட் காப்பு மறக்குடி மரபிற் றங்கள்
புரையிறொன் முறைமைக் கேற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பிழைத் திடையே கோத்த
வரைமணிக் கவடி கட்டி யழகுற வளர்க்கு நாளில். 18

ஆண்டெதி ரணைந்து செல்ல விடுமடித் தளர்வு நீங்கிப்
பூண்டிகழ் சிறுபுன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண் முளவுமுள் ளரிந்து கோத்த
காண்டரு மெயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பிற் றூங்க. 19

அனையன பலவுஞ் செய்தே யைந்தின்மே லான வாண்டின்
வனைதரு வடிவார் கண்ணி மறச்சிறு மைந்த ரோடுஞ்
சினைமலர்க் காவு ளாடிச் செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனைமருப் புழலை வேலிப் புறச்சிறு கானிற் போகி. 20

கடுமுயற் பறழி னோடுங் கானவே னத்தின் குட்டி
கொடுவரிக் குருளை செந்நாய் கொடுஞ்செவிச் சாபமான
முடுகிய விசையி லோடித் தொடர்ந்து முன்பற்றி முற்றத்
திடுமரத் திரளிற் கட்டி வளர்ப்பன வெண்ணி லாத. 21

அலர்பகல் கழிந்த வந்தி யையவிப் புகையு மாட்டிக்
குலமுது குறத்தி யூட்டிக் கொண்டுகண் டுயிற்றிக் கங்குல்
புலரவூ னுணவு நல்கிப் புரிவிளை யாட்டின் விட்டுச்
சிலமுறை யாண்டு செல்லச் சிலைபயில் பருவஞ் சேர்ந்தார். 22

## வில் பயிற்சி

தந்தையு மைந்த னாரை நோக்கித்தன் றடித்த தோளாற்
சிந்தையுண் மகிழப் புல்லிச் சிலைத்தொழில் பயிற்ற வேண்டி
முந்தையத் துறையின் மிக்க முதியரை யழைத்துக் கூட்டி
வந்தநாட் குறித்த தெல்லா மறவர்க்குச் சொல்லி விட்டான். 23

வேடர்தங் கோமக னாகன் வென்றிவே ளருளாற் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன்விற் பிடிக்கின் றானென்
றாடியற் றுடியுஞ் சாற்றி யறைந்தபே ரோசை கேட்டு
மாடுயர் மலைக ளாளு மறக்குலத் தலைவ ரெல்லாம் 24

மலைபடு மணியும் பொன்னுந் தரளமும் வரியின் றோலுங்
கொலைபுரி களிற்றின் கோடும் பீலியின் குவையுந் தேனுந்
தொலைவில்பன் னறவு மூனும் பலங்களுங் கிழங்குந் துன்றச்
சிலையுடை வேடர்கொண்டு திசைதொறு நெருங்க வந்தார். 25

சிலையினைக் காப்புக் கட்டுந் திண்புலி நரம்பிற் செய்த
நலமிகு காப்பு நன்னாள் நாகனார் பயந்த நாகர்
குலம்விளங் கரிய கன்றின் கோலமுன் கையிற் சேர்த்தி
மலையுறை மாக்க ளெல்லாம் வாழ்த்தெடுத் தியம்பி னார்கள். 26

வண்ணவெஞ் சிலையு மற்றப் படைகளு மலரக் கற்றுக்
கண்ணகன் சாயல் பொங்கக் கலைவளர் திங்களே போல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்தினா ரெல்லை யில்லாப்
புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு
போல்வார். 27

(வேறு)

இவ்வண்ணந் திண்ணனார் நிரம்பு நாளில்
இருங்குறவர் பெருங்குறிச்சிக் கிறைவ னாய
மைவண்ண வரைநெடுந்தோ ணாகன் றானும்
மலையெங்கும் வனமெங்கும் வரம்பில் காலங்

கைவண்ணச் சிலைவேட்டை யாடித் தெவ்வர்
கணநிரைகள் பலகவர்ந்து கானங் காத்து
மெய்வண்ணந் தளர்மூப்பின் பருவ மெய்தி
வில்லுழவின் பெருமுயற்சி மெலிவா னானான். 28

அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்க ளெங்கும்
அடலேனம் புலிகரடி கடமை யாமா
வெங்கண்மரை கலையொடுமான் முதலா யுள்ள
மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலைத்
திங்கள்முறை வேட்டைவினை தாழ்த்த தென்று
சிலைவேடர் தாமெல்லாந் திரண்டு சென்று
தங்கள்குல முதற்றலைவ னாகி யுள்ள
தண்டெரிய னாகன்பாற் சார்ந்து சொன்னார். 29

## கன்னி வேட்டை

சிலைமறவ ருரைசெய்ய நாகன் றானுந்
திண்ணனைமுன் கொண்டுவரச் செப்பி விட்டு
மலைமருவு நெடுங்கானிற் கன்னி வேட்டை
மகன்போகக் காடுபலி மகிழ வூட்டத்
தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி
தனையழைமி னெனவங்குச் சார்ந்தோர் சென்று
நிலைமையவ டனக்குரைப்ப நரைமு தாட்டி
நெடிதுவந்து விருப்பினொடுங் கடிது வந்தாள். 30

மற்றவன்றன் மொழிகேட்ட வரைச் சூராட்டி
மனமகிழ்ந்திங் கன்போடு வருகின் றேனுக்
கெற்றையினுங் குறிகள்மிக நல்ல வான
இதனாலே யுன்மைந்தன் றிண்ண னான
வெற்றிவரிச் சிலையோனின் னளவி லன்றி
மேம்படுகின் றானென்று விரும்பி வாழ்த்திக்
கொற்றவனத் தெய்வங்கள் மகிழ வூட்ட
வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள். 31

தந்தைநிலை யுட்கொண்டு தளர்வு கொண்டு
தங்கள்குலத் தலைமைக்குச் சாய்வு தோன்ற
வந்த குறை பாடதனை நிரப்பு மாறு
மனங்கொண்ட குறிப்பினான் மறாமை கண்டு,

முந்தையவன் கழல்வணங்கி முறைமை தந்த
　　முதற்சுரிகை யுடைதோலும் வாங்கிக் கொண்டு
சிந்தைபரங் கொளநின்ற திண்ண னார்க்குத்
　　திருத்தாதை முகமலர்ந்து செப்பு கின்றான். 32

நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை
　　நான்கொண்டு பரித்தன்மே னலமே செய்து
தெம்முனையி லயற்புலங்கள் கவர்ந்து கொண்ட
　　தண்சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்
வெம்முனையின் வேட்டைகளு முனக்கு வாய்க்கும்
　　விரைந்துநீ தாழாதே வேட்டை யாட
இம்முரண் வெஞ் சிலைவேடர் தங்க ளோடு
　　எழுகவென விடைகொடுத்தா னியல்பி னின்முன். 33

## ஆயுத்தம்

(வேறு)

நெறிகொண்ட குஞ்சிச் சுருடுஞ்சி நிமிர்ந்து பொங்க
முறிகொண்ட கண்ணிக் கிடை மொய்யொளிப் பீலிசேர்த்தி
வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறிகொண்ட வண்டின் குலஞ்சேர் கொளப் பின்புசெய்து. 34

முன்னெற்றியின் மீது முருந்திடை வைத்த குன்றி
மின்னிற்றிகழ் சங்கு விளங்குவெண் டோடு காதின்
தன்னிற்புரி கொண்ட மயிர்க்கயி றாரச் சாத்தி
மன்னிப்புடை நின்றன மாமதி போல வைக. 35

வீரக்கழல் காலின் விளங்க வணிந்து பாதஞ்
சேரத்தொடு நீடுசெருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப்பெரு வில்வலங் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத்திருத் தாள்மடித் தேற்றி வியந்து தாங்கி. 36

அங்கப்பொழு திற்புவ னத்திடர் வாங்க வோங்கித்
துங்கப் பெரு மாமழை போன்று துண்ணென் றொலிப்ப
வெங்கட்சின நீடு விலங்கு விலங்கி நங்கச்
செங்கைத்தலத் தாற்றட விச்சிறு நாணெ றிந்தார். 37

பல்வேறு வாளி புதைபார்த் துடன்போத வேவி
வில்வேட ராயத் துடிமேவி யொலிக்கு முன்றிற்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறுந் துதைந்து விம்ம
வல்லேறு போல்வா ரடல்வாளி தெரிந்து நின்றார். 38

மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதிற்
பானற்குல மாமல ரிற்படர் சோதி யார்முன்
தேனற்றசை தேறல் சருப்பொரி மற்று முள்ள
கானப்பலி நேர்கடவுட் பொறையாட்டி வந்தாள். 39

நின்றெங்கு மொய்க்குஞ் சினவேடரை நீக்கிப் புக்குச்
சென்றங்கு வள்ள றிருநெற்றியிற் சேடை சாத்தி
உன்றந்தை தந்தைக்கு மிந்நன்மைக ளுள்ள வல்ல
ந ்றும்பெரி துன்விற னம்மள வன்றி தென்றாள். 40

அப்பெற்றியில் வாழ்த்து மணங்குடை யாட்டி தன்னைச்
செப்பற்கரி தாய சிறப்பெதிர் செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேக மென்ன
மெய்ப்பொற் புடை வேட்டையின் மேற்கொண் டெழுந்து
போந்தார். 41

## புறப்பாடு

(வேறு)

தாளில் வாழ்செ ருப்பர் தோறழைத்த நீடு தானையார்
வாளி யோடு சாப மேவு கையர் வெய்ய வன்கணார்
ஆளி யேறு போல வேகு மண்ண லார்மு னெண்ணிலார்
மீளி வேடர் நீடு கூட்ட மிக்குமே லெழுந்ததே. 42

நண்ணி மாம றைக்கு லங்கள் நாட வென்று நீடுமத்
தண்ணி லாவ ரும்பு கொன்றை தங்குவேணி யார்தமைக்
கண்ணி னீடு பார்வை யொன்று கொண்டு காணு மன்பர்முன்
எண்ணில் பார்வை கொண்டுவேட ரெம்ம ருங்கு மேகினார். 43

கோடு முன்பொ லிக்க வுங்கு றுங்க ணாகு ளிக்குலம்
மாடு சென்றி சைப்ப வும்ம ருங்கு பம்பை கொட்டவுஞ்
சேடு கொண்ட கைவி ளிச்சி றந்த வோசை செல்லவுங்
காடு கொண்டெ ழுந்த வேடு கைவளைந்து சென்றதே. 44

நெருங்கு பைந்த ருக்கு லங்க ணீடு காடு கூடநேர்
வருங் கருஞ்சி லைத்த டக்கை மான வேடர் சேனைதான்
பொருந்த டந்தி ரைக்க டற்பரப் படைப்புகும் பெருங்
கருந்த ரங்க நீள்பு னற்க ளிந்தி கன்னி யொத்ததே. 45

## வேட்டையாடல்

தென்றி சைப்பொ ருப்பு டன்செ றிந்த கானின் மானினம்
பன்றி வெம்ம ரைக்க ணங்க ளாதி யான பல்குலந்
துன்றி நின்ற வென்ற டிச்சுவட்டி னொற்றர் சொல்லவே
வன்ற டக்கை வார்கொ டெம்ம ருங்கும் வேட ரோடினார். 46

ஓடியெ றிந்து வாரொழுக்கி யோச னைப்ப ரப்பெலாம்
நெடிய திண்வ லைத்தொ டக்கு நீளி டைப்பி ணித்து நேர்
கடிகொ ளப்ப ரந்த காடு காவல் செய்த மைத்தபின்
செடித லைச் சிலைக்கை வேடர் திண்ணனார்மு னண்ணினார். 47

வெஞ்சி லைக்கை வீர னாரும் வேட ரோடு கூடிமுன்
மஞ்ச லைக்கு மாம லைச்ச ரிப்பு றத்து வந்தமா
அஞ்சு வித்த டர்க்கு நாய்க ளட்டமாக விட்டுநீள்
செஞ்ச ரத்தி னோடு சூழல் செய்த கானு ளெய்தினார். 48

வெய்ய மாவெ ழுப்ப வேவி வெற்ப ராய மோடி நேர்
எய்யும் வாளி முன்செறி ரிந்து கொண்டு செல்ல வெங்கணும்
மொய்கு ரற்று டிக்கு லங்கள் பம்பை முன்சி லைத்தெழக்
கைவி ளித்த திர்ந்து மாவெ ழுப்பினார்கள் கானெலாம். 49

ஏன மோடு மானி னங்க ளெண்கு திண்க லைக்குலங்
கான மேதி யானை வெம்பு லிக்கணங்கள் கான்மரை
ஆன மாவ னேக மாம ருண்டெழுந்து பாயமுன்
சேனை வேடர் மேல டர்ந்து சீறி யம்பி னூறினார். 50

(வேறு)

தாளறுவன விடைதுணிவன தலைதுமிவன கலைமா
வாளிகளொடு குடல் சொரிதர மறிவன சில மரைமா
நீளுடல் விடு சரமுருவிட நிமிர்வன மிடை கடமா
மீளி கொள்கணை படுமுடலெழ விழுவனபல வுழையே. 51

வெங்கணைபடு பிடர் கிழிபட விசை யுருவிய கயவாய்
செங்கனல்விட வதனொடு கணை செறியமுனிரு கருமா
அங்கெழுசிர முருவியபொழு தடலெயிறுற வதனைப்
பொங்கியசின மொடுகவர்வன புரைவனசில புலிகள். 52

பின்மறவர்கள் விடுபகழிகள் பிறகுறவயி றிடைபோய்
முன்னடுமுக மிசையுருவிட முடுகியவிசை யுடனக்
கொன்மு னையடு சரமின மெதிர் குறுகியமுக முருவத்
தன்னெதிரெதிர் பொருவனநிகர் தலையனபல கலைகள். 53

பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
உலமொடுபடர் வனதகையுற வுறுசினமொடு கவர்நாய்
நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன னிடை தடை செய்த பொறிகளினள வுளவே. 54

துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி சிறு குருளைகண் மிகைபடு கொலை விரவார்
அடிதளர்வுறு கருவுடையன வணைவுறுபிணை யலையார்
கொடியெனவெதிர் முடுகியுமுறு கொலைபுரிசிலை மறவோர். 55

இவ்வகை வரு கொலைமறவினை யெதிர்நிகழ்வுழி யதிரக்
கைவரைகளும் வெருவுற மிடை கானெழுவதொ ரேனம்
பெய்கருமுகி லெனவிடியொடு பிதிர்கனல்விழி சிதறி
மொய் வலைகளை யறநிமிர்வுற முடுகியகடு விசையில். 56

## திண்ணனார் தனி வேட்டை

போதுமதனை யடுதிறலொடு பொருமறவர்க ளரியே
றாமவர் தொடர்வுறும் விசையுட னடிவழிசெலு மளவில்
தாமொருவரு மறிகிலரவர் தனிதொடர்வுழி யதன்மேல்
ஏமுனையடு சிலைவிடலைக ளிருவர்களடி பிரியார். 57

நாடியகழல் வயவர்களவர் நாணனுநெடு வரிவிற்
காடனுமெனு மிருவருமலை காவலரொடு கடிதிற்
கூடினர்விடு பகழிகளொடு கொலைஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வதுதரு நீழனின்விரை கேழல். 58

குன் றியைநிகர் முன்செறவெரி கொடுவிழியிடி குரனீள்
பன் றியுமடல் வன் றிறலொடு படர்நெறிநெடி தோடித்
துன் றியதொரு குன் றடிவரை குலவியநெறி சூழற்
சென் றதனிடை நின் றதுவலி தெருமர மரநிரையில் 59

அத்தருவளர் சுழலிடையடை யதனிலையறி பவர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது கருதலர்விசை கடுகி
மொய்த் தெழுசுடர் விடுசுரிகையை முனைபெறவெதி ருருவிக்
குத்தினருடன் முறிபடவெறி குலமறவர்க டலைவர். 60

## உணவும் ஓய்வும்
(வேறு)

வேடர்தங் கரியசெங்கண் வில்லியார் விசையிற் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு நாணன்
காடனே யிதன்பி னின்று காதங்கள் பலவந் தெய்த்தோம்
ஆடவன் கொன்றா னச்சோ வென்றவ ரடியிற் றாழ்ந்தார். 61

மற்றவர் திண்ண னார்க்கு மொழிகின்றார் வழிவந் தாற்ற
உற்றது பசிவந் தெம்மை யுதவிய விதனைக் காய்ச்சிச்
சற்றுநீ யருந்தி யாமுந் தின்றுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக்காடு குறுகுவோ மெல்ல வென்றார். 62

என்றவர் கூற நோக்கித் திண்ணனார் தண்ணீ ரெங்கே
கன்றுமிவ் வனத்தி லுள்ள தென்றுரை செய்ய நாணன்
நின்றவிப் பெரிய தேக்கி னப்புறஞ் சென்றா னீண்ட
குன்றினுக் கயலே யோடுங் குளிர்ந்தபொன் முகலியென்றான். 63

பொங்கிய சினவில் வேடன் சொன்னபின் போவோ மங்கே
இங்கிது தன்னைக் கொண்டு போதுமி னென்று தாமும்
அங்கது நோக்கிச் சென்றார் காவத மரையிற் கண்டார்
செங்கணே றுடையார் வைகுந் திருமலைச் சாரற் சோலை. 64

## காளத்தி மலை—குடுமித்தேவர் காட்சி

நாணனே தோன்றுங் குன்றி னண்ணுவே மென்ன நாணன்
காணநீ போதி நல்ல காட்சியே காணுமிந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித்தேவ ரிருப்பர்கும் பிடலா மென்றான். 65

ஆவதெ னிதனைக் கண்டிங் கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலு மாசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்குந்
தேவரங் கிருப்ப தெங்கே போகென்றார் திண்ண னார்தாம். 66

உரைசெய்து விரைந்து செல்ல வவர்களு முடனே போந்து
கரைவளர் கழையின் முத்துங் காரகிற் குறடுஞ் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும் வயிரமும் புளினந் தோறுந்
திரைகண்முன் றிரட்டி வைத்த திருமுக லியினைச் சார்ந்தார். 67

ஆங்கதன் கரையின் பாங்கோ ரணிநிழற் கேழ லிட்டு
வாங்குவிற் காடன் றன்னை மரக்கடை தீக்கோல் பண்ணி
ஈங்குநீ நெருப்புக் காண்பா யிம்மலை யேறிக் கண்டு
நாங்கள்வந் தணைவோ மென்று நாணனுந் தாமும் போந்தார். 68

அளிமிடை கரைசூழ் சோலை யலர்கள்கொண் டணைந்த வாற்றின்
தெளிபுன லிழிந்து சிந்தை தெளிவுறுந் திண்ண னார்தாங்
களிவரு மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூ டேகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார். 69

கதிர வனுச்சி நண்ணக் கடவுள்மால் வரையி னுச்சி
அதிர்தரு மோசை யைந்து மார்கலி முழக்கங் காட்ட
இதுவென்கொ னாணா வென்றார்க் கிம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமல ரீக்கள் மொய்த்து மருங்கெழு மொலிகொ லென்றான். 70

## ஆண்டவன்பால் எழுந்த அன்பும் ஆர்வமும்

முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மான
அன்பினை யெடுத்துக் காட்ட வளவிலா வார்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும் 71

நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகு சோ பானமேறி
ஆணையாஞ் சிவத்தைச் சார வணைபவர் போல வையர்
நீணிலை மலையை யேறி நேர்படச் செல்லும் போதில். 72

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார். 73

மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டா ரெழுந்த பேருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார். 74

நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கா றோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கணீ ரருவி பாய
அடியனேற் கிவர்தா மிங்கே யகப்பட்டா ரச்சோ வென்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற. 75

## திண்ணப்பர் பரிவும் செயலும்

வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார் போற்
கைம்மலை கரடி வேங்கை அரிதிரி கானந் தன்னில்
உம்முடன் றுணையா யுள்ளா ரொருவரு மின்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே யென்று நைந்தார். 76

கைச்சிலை விழுந்த தோரார் காளையார் மீளவந்துப்
பச்சிலை யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ வென்றலு மருங்கு நின்ற
அச்சிலை நாணன் றானு நானிது வறிந்தே னென்பான். 77

வன்றிற லுந்தை யோடு மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக் குளிர்ந்தரீ ரிவரை யாட்டி
ஒன்றிய விலைப்பூச் சூட்டி யூட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தா னின்று மவன்செய்த தாகு மென்றான். 78

உண்ணிறைந் தெழுந் தேறு மொழிவின்றி யாரா வன்பில்
திண்ணனார் திருக்கா ளத்தி நாயனார்க் கினிய செய்கை
எண்ணிய விவைகொ லாமென் றிதுகடைப் பிடித்துக் கொண்டவ்
அண்ணலைப் பிரிய மாட்டா தளவிலா தரவு நீட. 79

இவர்தமைக் கண்டே னுக்குத் தனியரா யிருந்தா ரென்னே
இவர்தமக் கமுதுசெய்ய விறைச்சியு மிடுவா ரில்லை
இவர்தமைப் பிரியவொண்ணா தென்செய்கே னினியான் சால
இவர்தமக் கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டு மென்று. 80

போதுவர் மீண்டும் செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலி னோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்
நாதனே யமுதுசெய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவே னென்பார். 81

ஆர்தம ராக நீரிங் கிருப்பதென் றகல மாட்டேன்
நீர்பசித் திருக்க விங்கு நிற்கவுங் கில்லே னென்று
சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை யெடுத்துக் கொண்டு மலர்க்கையாற் றொழுது
போந்தார். 82

முன்புநின் றரிதி னீங்கி மொய்வரை யிழிந்து நாணன்
பின்புவந் தணைய முன்னைப் பிறதுறை வேட்கை நீங்கி
அன்பு கொண் டுய்ப்பச் செல்லு மவர்திரு முகலி யாற்றின்
பொன்புனை கரையி லேறிப் புதுமலர்க் காவிற் புக்கார். 83

காடனு மெதிரே சென்று தொழுதுதீக் கடைந்து வைத்தேன்
கோடுடை யேன முங்கள் குறிப்படி யுறுப்பை யெல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளு மறித்து நாம் போகைக் கின்று
நீடநீர் தாழ்த்த தென்னோ வென்றலு நின்ற நாணன். 84

அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பன்ன நீங்கான்
இங்குமத் தேவர் தின்ன விறைச்சிகொண் டேகப் போந்தான்
நங்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்
கென்றான். 85

என்செய்தாய் திண்ணா நீதா னென்னமால் கொண்டா யெங்கள்
முன்பொரு முதலி யல்லை யோவென முகத்தை நோக்கார்
வன்பெரும் பன்றி தன்னை யெரியினில் வதக்கி மிக்க
இன்புறு திசைகள் வெவ்வே றம்பினா லீர்ந்து கொண்டு. 86

கோலினிற் கோத்துக் காய்ச்சிக் கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான் வாயினி லதுக்கிப் பார்த்துச்
சாலவு மினிய வெல்லாஞ் சருகிலை யிணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட அதன்மிசை யிடுவா ரானார். 87

மருங்கு நின் றவர்கள் பின்னு மயன்மிக முதிர்ந்தா னென்னே
அரும்பெற லிறைச்சி காய்ச்சி யதுக்கிவே றுமிழா நின்றான்
பெரும்பசி யுடைய னேனும் பேச்சில னெமக்கும் பேறு
தரும்பரி சுணரான் மற்றைத் தசைபுறத் தெறியா நின்றான். 88

## நாகன் காடன் சிந்தையும் செயலும்

தேவுமால் கொண்டா னிந்தத் திண்ணன்மற் றிதனைத் தீர்க்கல்
ஆவதொன் றறியோந் தேவ ராட்டியை நாக னோடு
மேவிநாங் கொணர்ந்து தீர்க்க வேண்டுமவ் வேட்டைக் கானில்
ஏவலாட் களையுங் கொண்டு போதுமென் றெண்ணிப்
போனார். 89

## திண்ணன் செய்த அன்புப் பூசை

கானவர் போன தோரரார் கடிதினிற் கல்லை யின்கண்
ஊனமு தமைத்துக் கொண்டு மஞ்சன மாட்ட வுன்னி
மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு கொய்த
தூநறும் பள்ளித் தாமங் குஞ்சிமேற் றுதையக் கொண்டார். 90

தனுவொரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல போனக மொருகை யேந்தி
இனியவெம் பிரானார் சாலப் பசிப்பரென் றிரங்கி யேங்கி
நனிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினார் திண்ணனார்
தாம். 91

இளைத்தனர் நாய னாரென் றீண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பான் மாற்றி வாயின்மஞ் சனநீர் தன்னை
விளைத்தவன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல்
விட்டார். 92

தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார் முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த கல்லை
இலைமிசைப் படைத்த வூனின் றிருவமு தெதிரே வைத்து. 93

கொழுவிய தசைக ளெல்லாங் கோலினிற் றெரிந்து கோத்தங்
கழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினா லதுக்கி நாவிற்
பழகிய வினிமை பார்த்துப் படைத்தவிவ் விறைச்சி சால
அழகிது நாய னீரே யமுதுசெய் தருளு மென்றார். 94

அன்னவிம் மொழிகள் சொல்லி யமுதுசெய் வித்த வேடர்
மன்னனார் திருக்காளத்தி மலையினார்க் கினிய நல்லூன்
இன்னமும் வேண்டு மென்னு மெழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையிற் றாழ்ந்தான். 95

அவ்வழி யந்தி மாலை யணைதலு மிரவு சேரும்
வெவ்விலங் குளவென் றஞ்சி மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித் திருக்கையிற் சிலையுந் தாங்கி
மைவரை யென்ன வையர் மருங்குநின் றகலா நின்றார். 96

சார்வருந் தவங்கள் செய்து முனிவரு மமரர் தாமுங்
கார்வரை யடவி சேர்ந்துங் காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா வன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிரு ணீங்க நின்றார். 97

கழைசொரி தரளக் குன்றிற் கதிர்நில வொருபாற் பொங்க
முழையர வுமிழ்த்த செய்ய மணிவெயி லொருபான் மொய்ப்பத்
தழைகதிர் பரிதி யோடுஞ் சந்திரன் றலையு வரலிற்
குழையணி காதர் வெற்புக் கும்பிடச் சென்றா லொக்கும். 98

விரவுபன் மணிகள் கான்ற விரிசுடர்ப் படலை பொங்க
மரகத மொளிகொ ணீல மணிகளு மிமைக்குஞ் சோதி
பொரவிரு சுடருக் கஞ்சிப் போயின புடைக டோறும்
இரவிரு ளொதுங்கி னாலே போன்றுள தெங்கு மெங்கும். 99

செந்தழ லொளியிற் பொங்குந் தீபமா மரங்களாலும்
மந்திகள் முறையில் வைத்த மணிவிளக் கொளிக ளாலும்
ஐந்துமா றடக்கி யுள்ளா ரரும்பெருஞ் சோதி யாலும்
எந்தையார் திருக்கா ளத்தி மலையினி லிரவொன் றில்லை. 100

வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட வறிந்த புள்ளின் சூழ்சிலம் போசை கேட்டுக்
கருங்கட லென்ன நின்று கண்டுயி லாத வீரர்
அரும்பெறற் றம்பிரா னார்க்கமுது கொண்டணைய வேண்டி. 101

ஏறுகாற் பன்றியோடு மிருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டை வினைத்தொழில் விரகி னாலே
ஊறுசெய் காலஞ் சிந்தித் துருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார். 102

## சிவகோசரியார் துயரமும் தொண்டும்

(வேறு)

மொய்காட்டு மிருள்வாங்கி முகங்காட்டுந் தேரிரவி
மெய்காட்டு மன்புடைய வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க விட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி யெழும்பொழுதில். 103

எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார். 104

வந்துதிரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடுஞ் செல்கின்றார் திருமுன்பு
வெந்தவிறைச் சியுமெலும்புங் கண்டகல மிதித்தோடி
இந்தவனு சிதங் கெட்டே னியார் செய்தா ரென் றழிவார். 105

மேவ நேர்வர அஞ்சா வேடுவரே யிது செய்தார்
தேவ தே வேசனே திருமுன்பே யிதுசெய்து
போவதே யிவ்வண்ணம் புகுதநீர் திருவுள்ளம்
ஆவதே யெனப் பதறி யழுதுவிழுந் தலமந்தார். 106

பொருப்பிலெழுஞ் சுடர்க்கொழுந்தின் பூசனையுந் தாழ்க்க நான்
இருப்பதினி யென்னென்றவ் விறைச்சியெலும் புடனிலையுஞ்
செருப்படியு நாயடியுந் திருவலகான் மாற்றியபின்
விருப்பினொடுந் திருமுகலிப் புனன்மூழ்கி விரைந்தணைந்தார். 107

பழுது புகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனை தொடங்கி
வழுவிறிரு மஞ்சனமே முதலாக வரும்பூசை
முழுது முறை மையின் முடித்து முதல்வனார் கழல் பணிந்தார். 108

பணிந்தெழுந்து தனிமுதலாம் பரனென்று பன்முறையால்
துணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்கள்
அணிந்த சடை முடிக்கற்றை யங்கணரை விடைகொண்டு
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச் சார்ந்தார். 109

## திண்ணனாரின் ஒப்பரிய பூசனை

இவ்வண்ணம் பெருமுனிவ ரேகினா ரினியிப்பால்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் திறமொழிவேன். 110

திருமலையின் புறம்போன திண்ணனார் செறிதுறுகல்
பெருமலைக ளிடைச் சரியிற் பெரும்பன்றி புனமேய்ந்து
வருவனவுந் துணிபடுத்து மானினங்கள் கானிடைநின்
றொருவழிச்சென் றேறுதுறை யொளிநின்று கொன்றருளி. 111

பயில்விளியாற் கலையழைத்துப் பாடுபெற வூடுருவும்
அயின்முகவெங் கணைபோக்கி யடியொற்றி மரையினங்கள்
துயிலிடையிற் கிடைசெய்து தொடர்ந்துகட மைகளெய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத் தனிவேட்டை வினை முடித்தார். 112

பட்டவன விலங்கெல்லாம் படர்வனத்தி லொருசூழல்
இட்டருகு திக்கடைகோ லிருஞ்சுரிகை தனையுருவி
வெட்டிநறுங் கோற்றேனு மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லை மருங்குபுடை படவமைத்தார். 113

இந்தனமு முறித்தடுக்கி யெரிகடையு மரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து மிகவளர்த்து மிருகங்கள்
கொந்தியயி லலகம்பாற் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து. 114

வாயம்பா லழிப்பதுவும் வகுப்பதுவுஞ் செய்தவற்றில்
ஆயவுறுப் பிறைச்சியெலா மரிந்தொருகல் லையிட்டுக்
காயநெடுங் கோல்கோத்துக் கனலின்க ணுற்றக்காய்ச்சித்
தூயதிரு வமுதமைக்கச் சுவைகாண லுறுகின்றார். 115

எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டூட்டும்
வண்ணவெரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு தாஞ்சோதித் தமைப்பார்போல்
திண்ணனார் திருவாயி லமைத்தாருந் திருவமுது. 116

நல்லபத முறவெந்து நாவின்க ணிடுமிறைச்சி
கல்லையினிற் படைத்துத்தேன் பிழிந்துகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்புபோ லுடன்கொண்டு வந்தணைந்தார். 117

வந்துதிருக் காளத்தி மலையேறி வனசரர்கள்
தந்தலைவ னாரிமை யோர் தலைவனார் தமையெய்தி
அந்தணனார் பூசையினை முன்புபோ லகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய பூசனையின் செயன்முடிப்பார். 118

ஊனமுது கல்லையுடன் வைத்திதுமுன் னையினன்றால்
ஏனமொடு மான்கலைகண் மரைகடமை யிவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சியமு தடியேனுஞ் சுவைகண்டேன்
தேனுமுடன் கலந்ததிது தித்திக்குமென மொழிந்தார். 119

இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தந்நெறியி லொழுகுவார்
எப்பொழுது மேன்மேல்வந் தெழுமன்பாற் காளத்தி
அப்பரெதி ரல்லுறங்கார் பகல் வேட்டை யாடுவார். 120

மாமுனிவர் நாடோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென வதுநீக்கிச் செப்பியவா கமவிதியால்
ஆமுறையி லருச்சனைசெய் தந்நெறியி லொழுகுவரால். 121

நாணனொடு காடனும்போய் நாகனுக்குச் சொல்லியபின்
ஊணுமுறக் கமுமின்றி யணங்குறைவா ளையுங்கொண்டு
பேணுமக னார் தம்பால் வந்தெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி வாராமற் கைவிட்டார். 122

முன்பு திருக் காளத்தி முதல்வனா றருணோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ. 123

அந்நிலையி லன்பனா ரறிந்த நெறி பூசிப்ப
மன்னியவா கமப்படியான் மாமுனிவ ரருச்சித்திங்
கென்னுடைய நாயகனே யிதுசெய்தார் தமைக்காணேன்
உன்னுடைய திருவருளா லொழித்தருள வேண்டுமென. 124

## சிவகோசரியார் கண்ட கனவு

அன்றிரவு கனவின்க ணருமுனிவர் தம்பாலே
மின்றிகழுஞ் சடைமவுலி வேதியர்தா மெழுந்தருளி
வன்றிறல்வே டுவனென்று மற்றவனை நீ நினையேல்
நன்றவன்றன் செயறன்னை நாமுரைப்பக் கேளென்று. 125

அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள் செய்வார். 126

பொருப்பினில்வந் தவன் செய்யும் பூசனைக்கு முன்பென்மேல்
அருப்புறு மென் மலர்முன்னை யவைநீக்கு மாதரவால்
விருப்புறுமன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படியவ் விளம்பருச் சேயடியிற் சிறப்புடைத்தால். 127

உருகியவன் பொழிவின்றி நிறைந்தவவ னுருவென்னும்
பெருகியகொள் சலமுகத்திற் பிறங்கியினி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவியுமிழு முயர்கங்கை முதற்றீர்த்தப்
பொருபுனலி னெனக்கவன்றன் வாயுமிழும் புனல்புனிதம். 128

இம்மலைவந் தெனையடைந்த கானவன்ற னியல்பாலே
மெய்ம்மலரு மன்புமேல் விரிந்தனபோல் விழுதலாற்
செம்மலர்மே லயனொடுமால் முதற்றேவர் வந்துபுனை
எம்மலரு மவன்றலையா லிடுமலர்போ லெனக் கொவ்வா. 129

வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ வெனுமன்பால்
நையுமனத் தினிமையி னையமிக மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியல்
எய்யும்வரிச் சிலையவன்றா னிட்டவூ னெனக்கினிய. 130

மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்க ளியாவையினும்
முன்பிருந்து மற்றவன்றன் முகமலர வகநெகிழ்ந்த
அன்பினினைந் தெனையல்லா லறிவுறா மொழி நல்ல. 131

உனக்கவன்றன் செயல்காட்ட நாளைநீ யொளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்றாய்
மனக்கவலை யொழிகென்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியா ரெழுந்தருளிப் போயினார். 132

கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்டுயிலார்
மனமுறுவற் புதமாகி வரும்பயமு முடனாகித்
துனைபுரவித் தனித்தேர்மேற் றோன்றுவான் கதிர்தோன்ற. 133

முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனன்மூழ்கிப்
பன்முறையுந் தம்பிரா னருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோற்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக வொளித்திருந்தார். 134

(வேறு)

கருமுகி லென்ன நின்ற கண்படா வில்லி யார்தாம்
வருமுறை யாறா நாளில் வருமிர வொழிந்த காலை
அருமறை முனிவனார்வந் தணைவதன் முன்புபோகித்
தருமுறை முன்புபோலத் தனிப்பெரு வேட்டையாடி. 135

மாறிலூ னமுது நல்ல மஞ்சனப் புனலுஞ் சென்னி
ஏறுநாண் மலரும் வெவ்வே றியல்பினி லமைத்துக் கொண்டு
தேறுவார்க் கமுதமான செல்வனார் திருக்காளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை யணுகவந் தணையா நின்றார். 136

இத்தனை பொழுதுந் தாழ்த்தே னெனவிரைந்தேகு வாரிமுன்
மொய்த்தபல் சகுனமெல்லா முறைமுறை தீங்குசெய்ய
இத்தகு தீய புட்க ளீண்டமுன் னுதிரங் காட்டும்
அத்தனுக் கென்கொல் கெட்டே னடுத்ததென் றணையும்
போதில். 137

## திண்ணனார் பரிவின் திறம்

அண்ணலார் திருக்கா ளத்தி யடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவுகாட்டித் திருநயனத்தி லொன்று
துண்ணென உதிரம்பாய விருந்தனர் தூரத்தேயவ்
வண்ணவெஞ் சிலையார்கண்டு வல்விரைந் தோடிவந்தார். 138

வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயி னன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து
வீழ்ந்தார். 139

விழுந்தவ ரெழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணார் செய்வ தறிந்தில ருயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி யாரிது செய்தா ரென்ன
எழுந்தனர் திசைக ளெங்கும் பார்த்தன ரெடுத்தார் வில்லும். 140

வாளியுந் தெரிந்து கொண்டிம் மலையிடை யெனக்கு மாறா
மீளிவெம் மறவர் செய்தா ருளர்கொலோ விலங்கின்சாதி
யாளிமுன் னாகியுள்ள விளைத்தவோ வறியே னென்று
நீளிருங் குன்றச் சார னெடிதிடை நேடிச் சென்றார். 141

வேடரைக் காணார்தீய விலங்குகள் மருங்கு மெங்கும்
நாடியுங் காணா மீள நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத்தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக்கொண்டு கதறினார் கண்ணீர் வார. 142

பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க் கடுத்த தென்னோ
ஆவியிலினிய வெங்க ளத்தனார்க் கடுத்த தென்னோ
மேவினார் பிரியமாட்டா விமலனார்க் கடுத்த தென்னோ
ஆவதொன் றறிகி லேன்யா னென்செய்கே னென்று
பின்னும். 143

என்செய்தாற் றீரு மோதா னெம்பிரான் றிறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய்கழல்வேட ரென்றும்
மின்செய்வார் பகழிப் புண்க டீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவனா னென்று
போனார். 144

நினைத்தனர் வேறுவேறு நெருங்கிய வனங்க ளெங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்க ணேறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக்கொண்டு பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிதுவந்து மருந்துகள் பிழிந்து வார்த்தார். 145

மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினாற் றிருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக் கண்டு
இற்றையி னிலைமைக் கென்னோ வினிச்செய லென்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தூனுக் கூனெனு முரைமுன் கண்டார். 146

இதற்கினி யென்க ணம்பா லிடந்தப்பி னெந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவு மடுக்கு மென்று
மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்துமுன் னிருந்து தங்கண்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணி லப்ப. 147

நின்றசெங் குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்து மாடி
நன்றுநான் செய்த விந்த மதியென நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே யுன்மத்தர் போல மிக்கார். 148

வலத்திருக் கண்ணிற் றங்க ணப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னுங் காட்ட நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக் கண்டன ருலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கையி னும்பர்
மேலார். 149

கண்டபின் கெட்டே னெங்கள் காளத்தி யார்கண் ணொன்று
புண்டரு குருதி நிற்க மற்றைக்கண் குருதிபொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டே னின்னும்
உண்டொரு கண்ணிக் கண்ணை யிடந்தப்பி யொழிப்பே
னென்று. 150

கண்ணுதல் கண்ணிற் றங்க ணிடந்தப் பிற்காணு நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்றன் றிருக்கண்ணி லிடக்கா லூன்றி
உண்ணிறை விருப்பி னோடு மொருதனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணி லூன்றத் தரித்திலர் தேவ தேவர். 151

செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர் திருக்கா ளத்தி யற்புதர் திருக்கை யன்பர்
தங்கண்முன் னிடக்குங் கையைத் தடுக்குமுன் றடுக்கு நாக
கங்கண ரமுத வாக்குக் கண்ணப்ப நிற்க வென்றே. 152

கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த வைய ருற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைக ளார்ப்ப. 153

பேறினி யிதன்மே லுண்டோ பிரான்றிருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண் டென்வலத்தின்
மாறிலாய் நிற்கவென்று மன்னுபே ரருள்பு ரிந்தார். 154

கண்ணப்ப நாயனார் புராணம் முற்றிற்று

# தற்காலப் பாடல்கள்

## 8. பாரதியார் பாடல்கள்

### கண்ணன் பாட்டு

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற்புதிது, சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மா கவிதை''

இயற்றியருளிய அமரகவி சுப்பிரமணிய பாரதியார் 1882 டிசம்பர் திங்கள் தோன்றி, 1921 செப்டம்பர் திங்களில் மறைந்தார். இந்த முப்பத்தொன்பது ஆண்டு காலத்திற்குள் தேசியம், சுதந்திரம், தமிழ், தெய்வீகம், சமூகம், சான்றோர், சிறுகாப்பியம் முதலிய பல பொருள் களில், பன்னூறு பாடல்கள் பாடியருளி, தமிழ்க்கவிதை வரலாற்றில் புது யுகம் ஒன்றிற்கு முன்னோடியாக அமைந்தார்.

அவர் பாடியருளிய பாடல்களுள் முப்பெரும் பாடல்கள் எனும் சிறப்பிற்குரிய 'கண்ணன் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' 'குயில் பாட்டு' என்னும் மூன்றனுள், கண்ணன் பாட்டிலிருந்து இரு பகுதிகள் இங்கு இடம் பெறுகின்றன. அவை 'கண்ணன்—என் சேவகன்', 'கண்ணன்-என் சீடன்' என்பனவாகும்.

அன்பற்கெல்லாம் அடியனாகித் தன் எளிவந்த தன்மை தோன்ற அடியவர்கட்கெல்லாம் அருள்சுரக்கும் கண்ணபிரானது சிறப்பு 'கண்ணன் என் சேவகன்' என்னும் பாடலில் எடுத்துரைக்கப்பெறுகிறது.

'கண்ணன் என் சீடன்' என்ற பகுதி 'அனைத்துச் செயலுக்கும் கண்ணனே காரணம்' என்னும் பகவத்கீதையின் கருத்தை மையமாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. 'நான்' என்னும் அகந்தைவிட்டு, ஆசையும் தாபமும் அற்று, எல்லாம் இறைவன் செயல் எனத் தெரிந்து செயல் புரிதலே இன்பவாழ்விற்கு வழியாகும் என்பதனை இப் பாடல் எடுத்துக் காட்டுகிறது. கண்ணன்-என் சேவகன் என்ற பாடல் அணைத்து ஆட்கொள்ளும் இறைவன் அருள் திறத்தினையும், 'கண்ணன்-என் சீடன்' என்ற பாடல் அடித்து ஆட்கொள்ளும் அவன் அறத்திறத்தினையும் நமக்குப் புலப்படுத்துவனவாகும்.

பகுதி—(அ)

## கண்ணன்-என் சேவகன்

கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெல்லாம் தாம்மறப்பார்
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;
'ஏனடா நீ நேற்றைங் கிங்குவர வில்லை' யென்றால்
பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த தென்பார்;
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்த தென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்;
ஓயாமல் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறு செய்வார்;
தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெலாம் ஊரம் பலத்துரைப்பார்;
எள்வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்.
சேவகரால் பட்ட சிரமமிக உண்டு கண்டீர்
சேவகரில் லாவிடிலோ செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்,
எங்கிருந்தோ வந்தான் 'இடைச்சாதி நான்' என்றான்
"மாடுகன்று மேய்த்திடுவேன், மக்களை நான் காத்திடுவேன்;
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்;
சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடுவேன்;
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்;
காடுவழி யானாலும், கள்ளர்பய மானாலும்,
இரவிற் பகலிலே எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை தேவரீர் தம்முடனே
சுற்றுவேன் தங்களுக்கோர் துன்பமுறா மற்காப்பேன்;
கற்றவித்தை யேதுமில்லை; காட்டு மனிதன், ஐயே!
ஆன பொழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்
நானறிவேன்; சற்றும் நயவஞ் சனைபுரியேன்"
என்றுபல சொல்லி நின்றான். "ஏது பெயர்? சொல்" என்றேன்
"ஒன்றுமில்லை; கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை"
[என்றான்.
கட்டுறுதி யுள்ளவுடல், கண்ணிலே நல்லகுணம்
ஒட்டுறவே நன்றா உரைத்திடுஞ்சொல் ஈங்கிவற்றால்

தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்
"மிக்கவுரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய்;
கூலியென்ன கேட்கின்றாய்? கூறு" றென்றேன். 'ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக ளேதுமில்லை;
நானோர் தனியாள்! நரைதிரை தோன்றா விடினும்
ஆன வயதிற் களவில்லை; தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை" யென்றான்;
பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே
கண்டு மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன்; அன்று முதற்கொண்டு,
நாளாக நாளாக, நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்; கண்ணனால்
பெற்றுவரு நன்மையெலாம் பேசி முடியாது
கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல், என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்.
வீதி பெருக்குகிறான்; வீடு சுத்த மாக்குகிறான்;
தாதியர்செய் குற்றமெலாம் தட்டி யடக்குகிறான்;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்
ஒக்கநயங் காட்டுகிறான்; ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்துவைத்துப் பால்வாங்கி மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து,
நண்பனாய், மந்திரியாய், நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி யென்று சொன்னான்.
இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்து விட்டேன்!
கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர் சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்,
தெளிவே வடிவாம் சிவஞானம் என்னும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண்!
கண்ணனை நான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்!
கண்கொண்டேன்!
கண்ணனெனை யாட்கொள்ளக் காரணமும் உள்ளனவே!

(பகுதி—ஆ)

## கண்ணன் - என் சீடன்

யானே யாகி என்னலாற் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்,
என்னிலும் அறிவினிற் குறைந்தவன் போலவும்,
என்னைத் துணைகொண்டு என்னுடை முயற்சியால்

என்னுடன் பழகலால் என்மொழி கேட்டலால்
மேம்பா டெய்த வேண்டினோன் போலவும்,
யான்சொலுங் கவிதை என்மதி யளவை
இவற்றினைப் பெருமை யிலங்கின வென்று
கருதுவான் போலவும், கண்ணன் கள்வன்

சீடனா வந்தெனைச் சேர்ந்தனன் தெய்வமே!
பேதையேன் அவ்வலைப் பின்னலில் வீழ்ந்து
பட்டன தொல்லை பலபெரும் பாரதம்;
உளத்தினை வென்றிடேன்; உலகினை வெல்லவும்
தானகஞ் சுடாதேன், பிறர்தமைத் தானெனும்,

சிறுமையி னகற்றிச் சிவத்திலே நிறுத்தவும்
தன்னுளே தெளிவும் சலிப்பிலா மகிழ்ச்சியும்
உற்றிடேன்; இந்தச் சகத்திலே யுள்ள
மாந்தர்க் குற்ற துயரெலாம் மாற்றி
இன்பத் திருத்தவும் எண்ணிய பிழைக்கெனத்

தண்டனை புரிந்திடத் தானுளங் கொண்டு,
மாயக் கண்ணன் வலிந்தெனைச் சார்ந்து,
புகழ்ச்சிகள் கூறியும், புலமையை வியந்தும்,
பலவகை யால்அகப் பற்றுறச் செய்தான்
வெறும்வாய் மெல்லும் கிழவிக் கிஃதோர்

அவலாய் மூண்டது; யானுமங் கவனை
உயர்நிலைப் படுத்தலில் ஊக்கமிக் கவனாய்,
"இன்னது செய்திடேல், இவரொடு பழகேல்,
இவ்வகை மொழிந்திடேல், இனையன விரும்பேல்,
இன்னது கற்றிடேல், இன்னநூல் கற்பாய்,

இன்னவ ருறவுகொள், இன்னவை விரும்புவாய்''
எனப்பல தருமம் எடுத்தெடுத் தோதி,
ஓய்விலா தவனோ டுயிர்விட லானேன்;
கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம்
எதிர்செயும் மனைவிபோல், இவனும்நான் காட்டும்
நெறியினுக் கெல்லாம் நேரெதிர் நெறியே
நடப்பா னாயினன்; நானிலத் தவர்தம்
மதிப்பையும் புகழுறு வாழ்வையும் புகழையும்
தெய்வமாக் கொண்ட சிறுமதி யுடையேன்,
கண்ணனாஞ் சீடன், யான் காட்டிய வழியெலாம்
விலகியே நடக்கும் விநோதமிங் கன்றியும்,
உலகினர் வெறுப்புறும் ஒழுக்கமத் தனையும்
தலையாக் கொண்டு சார்பெலாம் பழிச்சொலும்
இகழுமிக் கவனாய், என்மனம் வருந்த
நடந்திடக் கண்டேன்; நாட்பட நாட்படக்
கண்ணனும் தனது கழிபடு நடையில்
மிஞ்சுவா னாகி, வீதியிற் பெரியோர்
கிழவிய ரெல்லாம் கிறுக்கனென் றிவனை
இகழ்ச்சியோ டிரக்கமுற் றேளனம் புரியும்
நிலையும் வந்திட்டான். நெஞ்சிலே யெனக்குத்
தோன்றிய வருத்தம் சொல்லிடப் படாது
முத்தனாக் கிடநான் முயன்றதோர் இளைஞன்
பித்தனென் றுலகினர் பேசிய பேச்சென்
நெஞ்சினை அறுத்தது; நீதிகள் பலவும்
தந்திரம் பலவும் சாத்திரம் பலவும்
சொல்லிநான் கண்ணனைத் தொளைத்திட லாயினேன்
தேவ நிலையிலே சேர்த்திடா விடினும்
மானுடந் தவறி மடிவுறா வண்ணம்
கண்ணனை நானும் காத்திட விரும்பித்
தீயெனக் கொதித்துச் சினமொழி யுரைத்தும்
சிரித்துரை கூறியும், செள்ளென விழுந்தும்,
கேலிகள் பேசிக் கிளறியும், இன்னும்
எத்தனை வகையிலோ என்வழிக் கவனைக்
கொணர்ந்திட முயன்றேன்; கொள்பய னொன்றிலை;
கண்ணன் பித்தனாய்க் காட்டா னாகி,

எவ்வகைத் தொழிலிலும் எண்ணமற் றவனாய்,
எவ்வகைப் பயனிலுங் கருந்திழந் தவனாய்,
குரங்காய்க் கரடியாய்க் கொம்புடைப் பிசாசாய்,
யாதோ பொருளாய், எங்ஙனோ நின்றான்.
இதனால்,
அகந்தையும் மமதையும் ஆயிரம் புண்ணுற,
யான்கடுஞ் சினமுற்று, 'எவ்வகை யானும்
கண்ணனை நேருறக் கண்டே தீர்ப்பேன்'
எனப்பெருந் தாபம் எய்தினே னாகி,
'எவ்வா றேனும் இவனையோர் தொழிலில்
ஓரிடந் தன்னில் ஒருவழி வலிய
நிறுத்துவோ மாயின் நேருற் றிடுவான்'
என்றுளத் தெண்ணி, இசைந்திடுஞ் சமயங்
காத்திருந் திட்டேன். ஒருநாள், கண்ணனைத்
தனியே எனது வீட்டினிற் கொண்டு,
"மகனே, என்பால் வரம்பிலா நேசமும்
அன்பும் நீ யுடையை; அதனையான் நம்பி
நின்னிட மொன்று கேட்பேன்; நீயது
செய்திடல் வேண்டும்; சேர்க்கையின் படியே
மாந்தர்தஞ் செயலெலாம் வகுப்புறல் கண்டாய்.
சாத்திர நாட்டமும் தருக்கமும் கவிதையில்
மெய்ப்பொரு ளாய்வதில் மிஞ்சிய விழைவும்
கொண்டோர் தமையே அருகினிற் கொண்டு
பொருளினுக் கலையும் நேரம் போக
மிஞ்சிய பொழுதெலாம் அவருடன் மேவி
இருந்திட லாகுமேல் எனக்குநன் றுண்டாம்;
பொழுதெலாம் என்னுடன் போக்கிட விரும்பும்
அறிவுடை மகனிங் குனையலால் அறிந்திடேன்,
ஆதலால்,
என்பயன் கருதி எனக்கொரு துணையாய்
என்னுடன் சிலநாள் இருந்திட நின்னை
வேண்டி நிற்கின்றேன்; வேண்டுதல் மறுத்தே
என்னை நீ துன்பம் எய்துவித் திடாமே,
இவ்வுரைக் கிணங்குவாய்' என்றேன், கண்ணனும்,
"அங்ஙனே புரிவேன்; ஆயின் நின் னிடத்தே

தொழிலிலாது யாங்ஙனம் சோம்பரில் இருப்பது
காரிய மொன்று காட்டுவை யாயின்
இருப்பேன்'' என்றான், இவனுடை இயல்பையும்
திறனையுங் கருதி, 'என்செய்யுளை யெல்லாம்
நல்லதோர் பிரதியில் நாடொறும் எழுதிக்
கொடுத்திடுந் தொழிலினைக் கொள்ளுதி' என்றேன்.
நன்றெனக் கூறியோர் நாழிகை யிருந்தான்;
'செல்வேன்' என்றான் சினத்தொடு, நானும்
பழங்கதை யெழுதிய பகுதியொன் றினையவன்
கையினிற் கொடுத்துக் 'கவினுற இதனை
எழுதுக'' என்றேன்; இணங்குவான் போன்றதைக்
கையிலே கொண்டு கணப்பொழு திருந்தான்,
''செல்வேன்'' என்றான்; சினத்தீ யாகிநான்
''ஏதடா, சொன்ன சொல் அழித்துரைக் கின்றாய்;
பித்தனென் றுன்னை உலகினர் சொல்வது
பிழையிலை போலும்' என்றேன்; அதற்கு
'நாளைவந் திவ்வினை நடத்துவேன்' என்றான்.
''இத்தொழி லிங்கே இப்பொழு தெடுத்துச்
செய்கின் றனையா? செய்குவ தில்லையா?
ஒருரை சொல்''என் றுருமினேன். கண்ணனும்
''இல்லையென் றொ'' ருசொல் இமைக்குமுன் கூறினான்.
வெடுக்கெனச் சினத்தீ வெள்ளமாய்ப் பாய்ந்திடக்
கண்சிவந் திதழ்கள் துடித்திடக் கனன்றுநான்
''சீச்சீ' பேயே! சிறிதுபோழ் தேனும்
இனியென் முகத்தின் எதிர்நின் றிடாதே
என்றுமிவ் வுலகில் என்னிடத் தினிநீ
போந்திடல் வேண்டா, போ,போ, போ'' என்று
இடியுறச் சொன்னேன்; கண்ணனும் எழுந்து
செல்குவ னாயினன்; விழிநீர் சோர்ந்திட
''மகனே! போகுதி வாழ்கநீ! நின்னைத்
தேவர் காத்திடுக! நின்றனைச் செம்மை
செய்திடக் கருதி ஏதேதோ செய்தேன்;
தோற்றுவிட் டேனடா! சூழ்ச்சிகள் அழிந்தேன்.
மறித்தினி வாராய், செல்லுதி வாழிநீ!''
எனத்துயர் நீங்கி அமைதியோ டிசைத்தேன்.

சென்ற கண்ணன். திரும்பியோர் கணத்தே
எங்கிருந் தோநல் லெழுதுகோல் கொணர்ந்தான்;
காட்டிய பகுதியைக் கவினுற வரைந்தான்.
"ஐயனே, நின்வழி யனைத்தையும் கொள்வேன்
தொழில்பல புரிவேன் துன்பமிங் கென்றும்

இனிநினக் கென்னால் எய்திடா’ தெனப்பல
நல்லசொல் லுரைத்து நகைத்தனன் மறைந்தான்.
மறைந்ததோர் கண்ணன் மறுகணத் தென்றன்
நெஞ்சிலே தோன்றி நிகழ்த்துவா னாயினன்:
"மகனே, ஒன்றை யாக்குதல் மாற்றுதல்

அழித்திட லெல்லாம் நின்செய லன்றுகாண்;
தோற்றேன் எனநீ உரைத்திடும் பொழுதிலே
வென்றாய்; உலகினில் வேண்டிய தொழிலெலாம்
ஆசையும் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்க நீ!" என்றான். வாழ்கமற் றவனே!

★